பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 17 திங்கட்கிழமை 30.03.2020 கதிர் 145

### இனி இது ரகசியம் அல்ல!

தற்போதைய கொழும்பு அரசியல் களநிலைவரங்கள் சம்பந்தமாக சில உள்வீட்டுத் தகவல்கள் கிடைத்தன. அவற்றை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கின்றேன். தகவல்கள் மட்டுமே எனது, அவற்றைத் தொகுத்து

பக்கம் 02 »

# மலேசியாவில் தொற்றைப் பரப்பிய மசூதிக் குழுவால் இங்கும் ஆபத்து



நிகழ்வு நடந்த மசூதி

## அந்த நிகழ்வில் பங்குபற்றிய 3 அணிகள் இலங்கையில் சுதந்திர நடமாட்டமாம்

கொழும்பு,மார்ச்.30

மலேசியாவில் கொரோனாத் தொற்றுப் பெருமளவில் ஏற்படக் காரணமான மசூதி வழிபாட்டு நிகழ்வில் பங்குபற்றிய மூன்று இலங்கை அணிகளைச் சேர்ந்தோர் அங்கிருந்து திரும்பி இலங்கையில் பல இடங்களிலும் சுதந்திரமாக நடமாடியிருக்கின்றமையால் இங்கு கொரோனாத் தொற்றுப் பரவுவதற்கான பேராபத்து நிலைமை ஏற்பட்டிருப்பதாக அஞ்சப்படுகின்றது.

பக்கம் 02 »

## அக்குரணை முடக்கம்!

கொழும்பு, மார்ச் 30

சென்னையிலிருந்து திரும்பிய ஒருவர் கண்டி அக்குரணையில் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து, அக்குரணை முடக்கப்பட்டுள்ளது.

கண்டி வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பரிசோதனைகளின்போது, அக்குரணையைச் சேர்ந்த தொற்றாளர் கண்டறியப்பட்டார்.

பக்கம் 02 »

## பேருவளையிலும் ஒரு கிராமம் மூடப்பட்டது !

கொழும்பு,மார்ச்30

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டாலும் கலென்பிந்துனுவெவ, ஹொரோவொப்பொத்தானை, கஹட்டகஸ்திகிலிய ஆகிய நகரங்கள் மூடப்பட்டிருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

பேருவளை பன்னில கிராமம் நேற்று இரவு முதல் மூடப்பட்டுள்ளது.

அந்தக் கிராமத்தில் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி நாகொட வைத்தியசாலையில் நேற்றிரவு

பக்கம் 02 »

## 11 பேர் மீண்டனர்!

கொழும்பு, மார்ச் 30

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய மேலும் ஒருவர் குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளார். இதையடுத்து, இலங்கையில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட 11 பேர் இதுவரை குணமடைந்து வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ளனர் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பக்கம் 02 »

## போதகர் தலைமறைவு?

கொழும்பு, மார்ச் 30

கொழும்பு – ராஜகிரிய பகுதியின் ஒபேசேகரபுர மற்றும் ஸ்ரீ ஜயவர்தன புறக்கோட்டை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட அருணோதய மாவத்தை ஆகியவை தற்காலிகமாக நேற்று முடக்கப்பட்டன. நேற்று மாலை அந்தப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 02 »

## 100 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் வடமராட்சி கிழக்கில் கைது!



யாழ்ப்பாணம், மார்ச் 30

வடமராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் 100 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடற்படையினரும் பளை பொலிஸாரும்

பக்கம் 02 »

## கொரோனாவால் பொருளாதாரப் பேரிழப்பு ஜேர்மன் மாநில நிதியமைச்சர் தற்கொலை



கொரொனா வைரஸ் பாதிப்பினால் வீழ்ச்சியுற்ற தமது மாநில அரசின் பொருளாதாரத்தின் நெருக்கடியை எப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் சில

பக்கம் 02 »

## முதல் நோயாளியின் உடல் நேற்றுத் தகனம்



கொரோனா வைரஸின் தாக்கத்தால் நேற்று முன்தினம் மரணமான முதலாவது நோயாளி தர்மசிறி ஜனநாந்தாவின் (60 -வயது) சடலம் கடும்

பக்கம் 02 »

## டுபாயிலிருந்து வந்த இளைஞரால் ஆபத்து

கொழும்பு, மார்ச்30

களுத்துறை மாவட்டத்தின், பண்டாரகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டுலுகம முஸ்லிம் கிராமம்

பக்கம் 02 »

## 117 ஆக உயர்வு!

கொழும்பு, மார்ச் 30

மேலும் 2 பேர் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி உள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 117 ஆக உயர்ந்துள்ளது.

சிலாபம் மற்றும்

பக்கம் 02 »

## ஏப். 27 ஆம் திகதி வரை ஊரடங்கு மிக அவசியம்

மருத்துவ நிபுணர் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 30

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு ஏப்ரல் 27ஆம்

பக்கம் 02 »

காலைக்கதிர்
Kalaikkathir

## துயர்பகிர்வு அறிவித்தல் (மரண அறிவித்தல்)

உங்களின் துயரமான வேளைகளிலும் நாம் உங்களுக்கு உதவுகிறோம்.

அன்பானவர்களின் பிரிவினை அயலவர்களுடன் பகிர்ந்து ஆறுதலடையுங்கள்.

கட்டணம் ரூபாய் 1,000/= மட்டுமே

விளம்பரத்தை இப்பொழுது பிரசுரியுங்கள்!
கட்டணத்தை பின்னர் செலுத்துங்கள்!!

தொடர்புகளுக்கு: 30, இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
076 443 8622
kalaikkathiradvtgmail.com

## மலேசியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத வழிபாடுகளிற்காக மலேசியா சென்று வந்த குழுவினால் இலங்கையில் கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.

மலேசியாவின் ஸ்ரீபெட்டாலிங் மசூதியில் நடந்த வழிபாட்டில் கலந்து கொண்ட குழுவினாலேயே இலங்கைக்கு பெரும் அச்சுறுத்தல் உருவாகியுள்ளது.

ஸ்ரீபெட்டாலிங் மசூதியில் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதியன்று நடந்த வழிபாட்டில் உலகின் பல பகுதிகளிலுமிருந்து 16,000 பேர் வரையானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மலேசியாவில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களில் பெரும்பாலானவர்கள் இந்த வழிபாட்டில் கலந்து கொண்டவர்களே. வழிபாட்டில் கலந்து கொண்ட சுமார் 600 வரையான நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து, அந்த வழிபாட்டில் கலந்து கொண்டவர்களிற்கு விசேட அறிவிப்பு விடுத்த, மலேசியா அரசாங்கம் அவர்களை பரிசோதனைக்குள்ளாகுமாறும் அழைப்பு விடுத்தது.

இந்த வழிபாட்டிற்குச் சென்று, நாடு திரும்பிய 3 குழுக்கள் பற்றிய தகவல் கிடைத்துள்ளதாக நேற்று இலங்கை அரசு அறிவித்தது.

இந்தக் குழுக்களை உளவுத் துறை அடையாளம் கண்டுள்ள நிலையில், ஆன்மீக சுற்றுலா சென்றவர்கள் அக்குரணை, புத்தளம், பாலாவி மற்றும் மூதூர் பகுதிகளைச் சேர்ந்தோர் என கண்டறியப்பட்டுள்ளதாகவும், அவர்களைத் தனிமைப்படுத்தலுக்கு ள்ளாக்குவதற்கு உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன எனவும் பதில் பாதுகாப்பு தலைமை அதிகாரியும் இராணுவதளபதியும், கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்தும் தேசிய நடவடிக்கை மையத்தின் தலைவருமான லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மலேசியாவில் வழிபாட்டில் கலந்து கொண்டிருந்த ஒருவர் கொரோனா தொற்றுடன் புத்தளத்தில் அடையாளம் காணப்பட்டமையையடுத்து, புத்தளம் – கடையான்குளம் பகுதி நேற்றுக் காலை முற்றாக வெளித்தொடர்புகளில் இருந்து முடக்கப்பட்டது. பின்னர் அந்த ஊர் மக்கள் அனைவரும் பாடசாலை ஒன்றில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நீக்கல்மையத்துக்கு மாற்றப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த ஆன்மீக சுற்றுலா சென்று திரும்பிய முதல் குழுவில் அக்குரணை மற்றும் மூதூர் பகுதிகளைச் சேர்ந்த 7 பேர் உள்ளடங்குகின்றனர் எனவும் அந்த குழு கடந்த 13 ஆம் திகதி நாட்டுக்கு வந்துள்ளதாகவும் தெரிவித்த அவர், அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளில் இருந்தோர் தம்மை சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கிக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

2 ஆம் குழுவில் 5 பேர் உள்ளடங்குவதுடன் அவர்கள் பாலாவி மற்றும் புத்தளத்தை சேர்ந்தோர் எனவும் அவர்கள் கடந்த 15 ஆம் திகதி நாடு திரும்பியுள்ளனர் எனவும் உளவுத்துறை கண்டறிந்துள்ளது.

அத்துடன் 6 பேரை உள்ளடக்கிய மூன்றாம் குழு 17 ஆம் திகதி நாடு திரும்பியுள்ள நிலையில் அக்குழுவில் உள்ளடங்குவோர் புத்தளம் பகுதியைச் சேர்ந்தோர் என லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா கூறினார்.

இந்நிலையில் கொரோனா வைரஸ் பரவி வரும் சூழலில் அவ்வாறு சென்று வந்த அனைவருக்கும், அவர்களுடன் தொடர்புகளை பேணியோருக்கும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட சுகாதார துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

## 117ஆக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரத்தினபுரியில் இருந்து இவர்கள் இருவரும் அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## தனிமைப்படுத்தப்பட்ட தம்பதியர் விடுவிப்பு

கற்பிட்டிப் பகுதியில் 14 தினங்கள் தனிமைப்படுத்தப்பட்ட பெல்ஜியம் நாட்டு தம்பதியினரைச் சமூகமயப்படுத்த, கற்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தப் பகுதிக்குச் சுற்றுலா சென்ற இவ்விருவரும் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து தாய் நாடு திரும்பத் தயாராகியுள்ளனர்.

## ஊரடங்கு உத்தரவு

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம், கண்டி, புத்தளம் ஆகிய மாவட்டங்களின் ஊரடங்கு தொடர்ந்து மீள் அறிவித்தல் வரும் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களின் ஊரங்கு இன்று காலை 6 மணிக்கு தளர்த்தப்பட்டு, இன்று பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்படுகிறது.

## அக்குரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் அவரது நெருங்கிய தொடர்பாளர்களைச் சுகாதாரத் துறையும் பாதுகாப்பு மற்றும் உளவுத் துறையும் தேடியபோது முழு அக்குரணையும் கொரோனாவால் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பிரதேசமாக கண்டறியப்பட்டதையடுத்து அக்குரணை முடக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஏப்.27 ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதிவரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கவேண்டும் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

கோரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக 'எவிகன்' எனப்படும் 5 ஆயிரம் மருந்து வில்லைகளை இலங்கைக்கு ஜப்பான் வழங்கியுள்ளது.

இந்த மருந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாட்டை வந்தடையும்.

இதனிடையே, அரச வைத்தியசாலைகளில் கிளினிக்கிற்காக பதிவுசெய்துள்ள நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை மத்திய தபால் பரிமாற்றகத்தினூடாக விநியோகிக்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் சுகாதார ஊழியர்களின் பாதுகாப்புக்காக சீனா, உபகரணங்கள் சிலவற்றை வழங்கியுள்ளது. இந்த உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை விரைவில் முன்னெடுக்கப்படும் என்றும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நரம்பியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களை ஊகிப்பது வாசகர்களைப் பொறுத்தது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பேரிடர் நிலைவரம் குறித்து ஆராய்வதற்காகக் கடந்த திங்களன்று அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்தராஜபக்ஷ கூட்டிய கட்சித் தலைவர்கள் மாநாட்டுக்கு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரசிங்க நேரத்துடனேயே வந்திருந்தார்.

கட்சித் தலைவர்கள் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் பிரதமர் மஹிந்தவும் ரணில் விக்கிரமசிங்கவும் மூடிய அறைக்குள் தனித்துச் சந்தித்து நீண்ட நேரம் மந்திராலோசனை நடத்தினர். அதன் பின்னரே கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளவும் கூட்ட வேண்டும் என்ற கோரிக்கையை ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டார். ஆனால் வலியுறுத்தவில்லை.

அச்சமயமும், பின்னர் ஹக்கீம், சுமந்திரன் ஆகியோர் நாடாளுமன்றத்தைத் திரும்பவும் கூட்ட வேண்டும் என்று கோரிய போதும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எந்தப் பிரதிபலிப்பும் காட்டவில்லை.

அதேநேரம், அதைப் பிரதமர் மறுத்துரைக்க முனையவில்லை.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளவும் கூட்டக் கூடாது என்று விமல் வீரவன்சவும், உதய கம்மன்பிலவும் ஆக்கிரோஷமாகக் கருத்து வெளியிட்ட போதும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏனைய புன்னகையை வெளிப்படுத்தி விட்டு வாளா விருந்து விட்டார்.

இந்த சர்வகட்சிக் கூட்டத்தின் முடிவில்தான் கொரோனாவைரஸ் தாக்கத்தை ஒட்டி உலக நாடுகள் கொண்டு வந்துள்ள புதிய சட்டங்களை நன்கு ஆராய்ந்து இலங்கைக்குத் தேவையான சட்ட வடிவத்தைத் தயார் செய்து பரிந்துரைக்கும் பணியை முன்னெடுக்குமாறு நாட்டின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனைக் கேட்டுக் கொண்டார். ரணில் விக்கிரமசிங்கவையும் முன்பாக வைத்துக் கொண்டு இந்தக் கோரிக்கை சுமந்திரனிடம் முன்வைக்கப்பட்டது என்பதை சில தினங்களுக்கு முன்னர் இப் பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன். அது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தப் பணியைப் பொறுப்பெடுத்துச் செய்யுமாறு சுமந்திரனை அப்போதே – அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு முன்பாக வைத்தே – ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியிருந்தார்.

கொரோனா தாக்கத்தை அடுத்து அதனால் எழுந்துள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக இத்தாலி, பிரிட்டன், இந்தியா, தென்னாபிரிக்கா, அயர்லாந்து, எஸ்வார்டினி இராச்சியம் (முன்னர் சுவாஸிலாந்து என அழைக்கப்பட்டது) போன்ற பல நாடுகள் புதிய சட்டங்களைக் கொண்டு வந்திருக்கின்றன.

அவை எல்லாம் 'புதிய ரக அவசர காலச் சட்டம்' குறித்து கவனம் எடுத்துள்ளன. அது *'பொதுச் சுகாதார அவசரகாலம்'* *(Public Health Emergency)*

அந்த ரகத்திலான அவசர காலத்தை ஒட்டிய புதிய சட்டமூலம் இலங்கைக்கும் மிக மிக அவசியமானதாகும்.

அதற்கான வரைவைத் தயாரிப்பதுதான் சுமந்திரனுக்குக் கொடுக்கப்பட்ட பணி.

அதுவல்ல விடயம்.

அத்தகைய புதிய சட்ட வரைவைப் பொறுப்பேற்று சட்டமாக்க வேண்டிய கடமை அரசுத் தரப்பைச் சேர்ந்தது.

ஆனால் அரசுத் தரப்போ, வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவோ இந்த விடயத்தில் சுமந்திரனுடன் 'டீல்' பண்ணுவதாகத் தெரியவில்லை.

அரசாங்கத்தில் – அரசில் – இடம்பெறாத ரணில் விக்கிரமசிங்கதான் சுமந்திரனுடன் இந்த விடயம் குறித்து அடிக்கடி தொடர்பு கொண்டு, சட்டமூலம் தயாரா, தயாரா என்று நச்சரித்து வருகின்றார் என்று அறியவந்தது.

குறைந்த பட்சம் எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தில் கூட இல்லாத ரணில் விக்கிரமசிங்க எதற்காக சுமந்திரனிடம் புதிய சட்டத்துக்கான வரைவைக் கேட்டு நச்சரிக்கின்றார்?.

இதில் ரணிலின் பொறுப்பு என்ன? மஹிந்த சார்பில் சுமந்திரனைக் கையாளும் வேலையை ரணில் ஏற்றுக் கொண்டுள்ளாரா? அல்லது மஹிந்தர் அணியில் ரணிலும் இப்போது அங்கமா? அரசுத் தரப்பு செய்ய வேண்டிய வேலையை சுமந்திரனிடம் கையளித்திருப்பதில் அர்த்தம் உண்டு.

புதிய 'அவசரகாலம்' ஒன்று பற்றிய விதியை தயாரிக்கும் பொறுப்பை அந்த சட்டத்துறையில் துறைதேய்ந்தவரிடம் கையளித்திருப்பதில் ஆச்சரியமில்லை. அவரை நேரடியாகக் கையாளாமல் ரணில் அரசுத் தரப்புக் கையாள எத்தனிப்பதில் அடங்கியுள்ள சூத்திரம் என்ன?

எனக்குக் கேட்கத்தான் தெரியும், விடையை ஊகித்தறிவதை வாசகர்களாகிய உங்களிடமே விட்டு விடுகின்றேன்.

*'தகவல் தருவது நான். தீர்மானிப்பது நீங்கள்...!'* – எப்படி இருக்கின்றது எனது புதிய ஊடக சுலோகம்? இன்னொரு ஊடகத்தின் முழுக் 'கொப்பி' இது என்பது வாசகர்களுக்குத் தெரியாதா என்ன?

–மின்னல்–

## பேருவளையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டுள்ளார் .

இவர் சுமார் 20 பொது இடங்களுக்கு கடந்த சில நாள்களாக பயணித்துள்ளமையால் அந்த இடங்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பள்ளிவாசல் ஒன்றில் பெருமளவானோர் கூடினார்கள் என்று போலித் தகவல்களை பரப்பிய இருவரைப் பொலிஸார் பேருவளையில் கைது செய்துள்ளனர். (ஐ)

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள்களாகத் தடுமாறிய அந்த மாநில நிதி அமைச்சர் அந்தக் கவலையில் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

இந்தத் துயரச் சம்பவம் ஜேர்மனியின் ஹெஸ்ஸி மாநிலத்தில் நேற்று நடந்திருக்கின்றது. அந்த மாநிலத்தின் நிதி அமைச்சராக கடந்த பத்தாண்டுகளாகப் பணி புரிந்து வந்த தோமஸ்ஸாவர் (வயது54) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டிருக்கின்றார்.

ஜேர்மனியின் மிக முக்கியமான பல வங்கிகளின் தலைமையகம் அமைந்திருப்பதும் ஜேர்மனியின் நிதித் துறைத் தலைநகரம் என்று வர்ணிக்கப்படுவதுமான பிராங்போர்ட் நகரம் இவரது மாநிலத்துக்குள்ளேயே வெளகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## 100 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து நேற்றுக் காலை மேற்படி கஞ்சாவை கைப் பற்றியுள்ளதுடன்

அப்பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவரையும் அவர் பயணித்த படகையும் கைப் பற்றியுள்ளனர்.

இதேவேளை, கடற்கரையில் ஒதுங்கிய ஒரு தொகுதி கஞ்சாவை மக்கள் தகவல் வழனகியதை அடுத்து பளை பொலிஸார் எடுத்துச் சென்றுள்ளனர். சந் தேக நபரை பளை பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (ஐ)

## 11 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் 117 பேர் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புடன் சர்வதேச சுகாதார அறிவுறுத்தல்களின் கீழ் கொடிகாவத்த மயானத்தில் நேற்று மாலை தகனம் செய்யப்பட்டது.

## டுபாயிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளித் தொடர்புகளில் இருந்து முற்றாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த ஊரைச் சேர்ந்த சுமார் 500 குடும்பங்களை சேர்ந்த 20 ஆயிரம் பேர் வரை இவ்வாறு அவர்களது வீடுகளுக்குள்ளேயே முடக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

டுபாய் சென்று வந்த நண்பர்கள் இருவர், தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகாமல் ஊர் முழுதும் சுற்றித் திரிந்த நிலையில், அவர்களில் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து கிராமம் முடக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொற்றாளரின் தந்தை மற்றும் சகோதரிக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதியான நிலையில் அவர்களும் தற்போது அங்கொடை தொற்று நோய் தடுப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

## போதகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்பகுதிகளில் இருந்து கொரோனா தொற்று அறிகுறிகளுடன் சிறுவர்கள் உட்பட சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மத போதகர் ஒருவர் நடத்திய ஆராதனையில் கலந்து கொண்டவர்களே பாதிக்கப்பட்டனர். அந்த ஆராதனைக் கூடம் தற்போது பூட்டப்பட்டுள்ளதாகவும், போதகர் அங்கிருந்து சென்று விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# கொலையாளிச் சிப்பாய் பொது மன்னிப்பில் விடுதலை
# கொரோனாத் திரைமறைவில் கோட்டாவின் இழி செயல்

## ஐங்கரநேசன் கண்டனம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

மிருசுவிலில் எட்டு அப்பாவித் தமிழர்களைக் கொன்று மலக்குழியில் புதைத்த கொலையாளிச் சிப்பாய் சுனில் இரத்நாயக்காவுக்கு வழங்கப்பட்டிருந்த மரணதண்டனையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீக்கிப் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். உலகமே கொரோனாப் பீதியிலும் ஊரடங்கு அமைதியிலும் உறைந்து கிடக்கும் நேரம் பார்த்து, கொரோனாத் திரைமறைவில் கோட்டாபய ராஜபக்ஷ இந்த இழிசெயலை அரங்கேற்றியுள்ளார் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

மிருசுவில் படுகொலைக் குற்றவாளி கோப்ரல் சுனில் இரத்நாயக்காவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருப்பது தொடர்பாக பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் –

மிருசுவில் படுகொலையாளிக்கு 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை இலங்கையில் நீதித்துறையின் உச்ச அமைப்பான உயர் நீதிமன்றமும் உறுதி செய்திருந்தது. இந்நிலையில் ஜனாதிபதி இச்சிப்பாயை விடுதலை செய்திருப்பதன் மூலம் நிதித்துறையின் மாண்பையே கேலிக்கு உள்ளாக்கியுள்ளார்.

தமிழின அழிப்புக்குச் சர்வதேச விசாரணை வேண்டும் என்று பல தரப்பும் வலியுறுத்தி வருகின்ற நிலையில் நீதிமன்றில் அடையாளம் காணப்பட்ட போர்க்குற்றவாளியை ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார். இதன் மூலம் இராணுவம் தொடர்பான உள்ளக விசாரணைக்கோ அல்லது சர்வதேச விசாரணைக்கோ இலங்கையில் இடமேயில்லை என்று ஜனாதிபதி தெட்டத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

சோறு கொடுத்தவர்கள், தங்க இடம் கொடுத்தவர்கள் போன்ற அற்ப காரணங்களுக்காகச் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக் கோரிக்கைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாத ஜனாதிபதி, தனது இரத்தம் என்ற ஒரே காரணத்துக்காகப்



படுகொலைப் புரிந்த சிப்பாயை விடுதலை செய்துள்ளார். இதன் மூலம் ஜனாதிபதி தமிழ் மக்கள் தனக்கு ஒரு பொருட்டே அல்ல என்பதையும் சிங்கள மக்களுக்கான அதிபரே தான் என்பதையும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளார்.

கொரோனா, கடற்கோள் போன்ற பேரிடர்க் காலங்களில் படையினரை அவசர பணிகளில் ஈடுபடுத்துவது ஏற்றுக்கொள்ளத்தக்கதாயினும், ஜனாதிபதி சாதாரண சிவில் நிர்வாக நடவடிக்கைகளிலே படையினரை உள்வாங்கி வருவதோடு, இப்போது உச்சமாக மரண தண்டனைச் சிப்பாய்க்கு விடுதலையும் வழங்கியுள்ளார். இதன் மூலம் ஜனநாயகப் பலத்தைவிட இராணுவப் பலத்தையே தனது ஆட்சித் துணையாகத் தாம் நம்புகிறார் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது இனவாதத்தைக் கக்கி வெற்றியைப் பெற்ற கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, தமிழ் மக்களைக் கொன்ற சிப்பாயைச் சிறைமீட்டவர் என்ற பிம்பம் வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலிலும் பெரு வெற்றியை பெற்றுத் தரக்கூடும். ஆனால், பதவியேற்றமை முதல் ஜனாதிபதி தமிழ்மக்கள் தொடர்பாக எடுத்து வரும் நிலைப்பாடுகள் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஒருபோதும் ஐக்கியபட முடியாதவாறே துருவப்படுத்தி வருகின்றன.

ஜனாதிபதி தன்னைச் சிங்கள மக்களுக்கான ஜனாதிபதியாக வெளிப்படையாகவே அடையாளப்படுத்தி வருகின்றபோது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை அவரிடம் இருந்து பெற்றுக் கொள்ள இயலாது என்பது வெள்ளிடைமலை. இந்நிலையில்,விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று சொல்லி இனவழிப்புப் போரை முன்னெடுத்த அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்த வல்லாதிக்க சக்திகளே இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் இருப்புக்கான அரசியல் உத்தரவாதத்தையும் வழங்கவேண்டும். – என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவிற்கு கடல் வழியாக வந்த மூவர் உட்பட 4 பேர் கைது

முல்லைத்தீவு,மார்ச்30

கடற்றொழில் செய்வதற்கான எந்த உபகரணங்களும் இல்லாது திருகோணமலையில் இருந்து 40 குதிரை வலுக்கொண்ட இயந்திரம் பூட்டப்பட்ட படகில் முல்லைத்தீவு வலைஞர்மடம் பகுதிக்கு வருகை தந்த மூன்று இளைஞர்களும் முல்லைத்தீவு இளைஞர் ஒருவருமாக நான்கு இளைஞர்கள் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறை படுத்தப்பட்டு உள்ள நிலையில் மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டுள்ளது.

எனினும் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. கடற்றொழில் செய்பவர்கள் கர்சியிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்திற்குள் தொழில் செய்வதற்கே அந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே மேற்படி நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேக நபர்கள் வந்த படகிலிருந்து ஒரு லட்சத்து 59 ஆயிரம் ரூபா பணம் மீட்கப்பட்டுள்ளது. இதனால் இவர்கள் சட்டவிரோதமாக முல்லைத்தீவிலிருந்து கஞ்சாவைக் கடத்திச் செல்வதற்காக வந்தார்களா என்ற சந்தேகத்தில் அவர்கள் வந்து இறங்கிய இடத்தில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும் அவ்வகையான எந்த விதமான பொருள்களும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் அந்த நான்கு பேரும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

கைது செய்யப்பட்ட முல்லைத்தீவைச் சேர்ந்த இளைஞருடைய மோட்டார் சைக்கிளையும் சந்தேக நபர்கள் கொண்டு வந்த படகு மற்றும் உடைமைகளும் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன

மேற்படி சந்தேக நபர்கள் 19 ,20 ,22, 24 வயதுடைய இளைஞர்கள் எனவும், இவர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர. எனவும் கூறப்பட்டது.





SMART HOME
இலங்கையின் முதற்தரமான
* அதிரடியான விலைக் கழிவுகள்
* விநியோகம் இலவசம்
* ஒப்பந்தகாரர்களுக்கு விசேட சலுகைகள்
FLOOR TILES, WALL TILES மற்றும் குளியலறை, சாதனங்களில் முதன்மை நாமமான ROCELL உற்பத்திகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
A9 வீதி, கொடிகாமம்.
021 434 86 88, 077 744 86 88

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

# நம்மவை மதம் பிடித்தவையா? சமயம் பார்த்து மாறுபவையா?

வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் பொருத்தமான சமயத்தில் பொருத்தமான கோரிக்கை ஒன்றை பொருத்தமான தரப்பிடம் முன்வைத்திருக்கின்றார்.

அந்தக் கோரிக்கையை சமூகத்தில் முன் வைப்பதற்கும் மிகப் பொருத்தமானவரும் அவர்தான்.

இன்று வணக்க ஸ்தலங்களில் நடைபெறவேண்டிய வருடாந்த திருவிழாக்கள், பூஜைகள், ஆராதனைகள், வழிபாடுகள் அனைத்தும் கொரோனாவின் நிமித்தம் ஸ்தம்பித்துப் போயிருக்கின்றன என்று சுட்டிக்காட்டும் நீதியரசர் விக்னேஸ்வரன், அதன் காரணமாகப் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கினால் அவலப்பட்டுப் போயிருக்கும் அன்றாடம்காய்ச்சிப் பொதுமக்களின் பரிதாப நிலைமையை நெஞ்சைத் தொடும் வகையில் நினைவூட்டியிருக்கின்றார்.

இந்தக் காலகட்டத்தில்தான் ‘மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை’ என்ற முதுமொழி முற்றும் பொருந்துகின்றது என்ற உண்மையை ஆணி அடித்தால்போல நம் கவனத்தில் உறைக்க விவரிக்கின்றார்.

கோயில்களில் திருவிழாக்கள் செய்ய இருந்த உபயகாரர்கள், வணக்க ஸ்தலங்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் மற்றும் அறநிலையக் காப்பாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இன்று பட்டினியால் வாடும் வறிய குடும்பங்களுக்கு ஓரிரு வாரங்களுக்கேனும் பாவிக்கக் கூடிய உலர் உணவுப் பொதிகளை, சமய காரணங்களுக்காக வைத்திருக்கும் நிதியைப் பயன்படுத்தி வாங்கிக் கொடுக்க முன்வரவேண்டும் என்று தமது மூப்பினால் சமூகத்தில் தமக்குள்ள மேன்மையுரிமையைப் பயன்பத்திக் கோரியிருக்கின்றார் அவர்.

கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் வணக்க ஸ்தலங்கள் அனைத்தினதும் நிர்வாகிகளிடமும் மதத் தலைவர்களிடமும் வழிபாட்டாளர்களிடமும் ஓர் அன்பான வேண்டுகோளாக இதனை முன் வைத்திருக்கின்றார் அவர்.

இந்தக் கோரிக்கைக்கு நமது மதத் தலைவர்கள் காட்டப் போகும் பிரதி பலிப்புகள் என்ன?

மத நிறுவனங்கள், கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் உண்மையில் சமூக மையங்கள் என்றால், அவை தமது மேன்மையை – மாண்பை – உயர்ந்த, பூஜிக்கப்படுகின்ற ஸ்தலங்களுக்கான தகுதியை – வெளிப்படுத்தி, நிரூபிக்க வேண்டிய மிகப் பொருத்தமான சமயம் இதுதான்.

மத நிலையங்கள் ‘மதம்’ பிடித்தவை அல்ல என்பதை நிரூபிக்க –

சமயங்கள் என்பவை சமயம் பார்த்து நழுவி விடுவன அல்ல என்பதை வெளிப்படுத்த –

ஒவ்வொரு நிறுவனத்துக்கும் கிடைத்திருக்கும் அருமையான வாய்ப்பு – சந்தர்ப்பம் – இது.

யாழ்ப்பாணம் என்றதும் அடையாளக் குறியீடாகக் காட்டப்படுவது நல்லூர்க் கோவில் முகப்புத்தான். ஆகவே யாழ்ப்பாணத்தின் குறியீடாகவும், இலச்சினையாகவும் அந்தக் குறியீடு வெறும் அடையாளமாக – பௌதீகக் கட்டடத் தோற்றமாக – தென்படுவது அர்த்தமற்றது.

உணர்வு பூர்வமாகவும் உயிரோட்டமாகவும் அது யாழ்ப்பாண மக்களின் குறியீடாக மிளிர வேண்டும்.

தனது சக மனிதனை, சகோதரப் பிரஜையை ஓம்புவதிலும் உபசரிப்பதிலும் யாழ்ப்பாணத்தவர்களின் சிறப்பையும், பெருமையையும் வெளிப்படுத்தும் குறியீடே நல்லூர் என்பதை முரசறைவதாக இந்த விடயத்தில் அதன் பிரதிபலிப்பு இருக்க வேண்டும்.

நல்லூர் போன்ற பிரதான கோவில்கள் பல குறித்து சமூக ஆர்வலர்கள், பொது நோக்கர்கள், வெளிப்படையான அவதானிகள், விமர்சகர்கள் மத்தியில் விசனத்துக்குரிய பல விமர்சனங்கள் உண்டு.

ஆயிரம் பிறை கண்ட தமது வயதை மாத்திரம் வைத்து, அந்த உரிமையுடன் நீதியரசர் விக்னேஸ்வரன் முன் வைத்திருக்கும் கோரிக்கை தொடர்பில் தங்கள் நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டிய கடப்பாடும், பொறுப்பும் நல்லூர் போன்ற முக்கிய ஆலயங்கள், பிரதான தேவாலயங்கள், மசூதிகளுக்கு உண்டு.

கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர் அரக்கனின் கோரப் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் உலக மக்களுக்கு ஆறுதலும், தெம்பும், தைரியமும், நம்பிக்கையும் தரவல்லவை மதங்களே.

அவை வெறும் மத நம்பிக்கைகளைத் தருவனவாக மட்டும் அமைவதோடல்லாமல் பௌதீக வாழ்வுக்கு – லௌகீக வாழ்வுக்கு – நேரடி உதவி தருவனவாகவும் அமைய வேண்டும்.

செய்யுமா நம் மதத் தலைமைகள், நிறுவனங்கள்...?

# தமிழகத்தில் முடங்கிக் கிடக்கும் ஈழ அகதிகளுக்கும் நெருக்கடி கால நிதி உதவியை வழங்கக் கோரிக்கை

## நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வற்புறுத்தல்



சென்னை,மார்ச்30

தமிழக அகதி முகாம்களில் ஊரடங்கு காரணமாக முடங்கிக் கிடக்கும் ஈழத் தமிழ் அகதிகளுக்கும் நெருக்கடி கால நிதி உதவியை வழங்குமாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு: –

தமிழகத்தில் ஏறத்தாழ ஒரு லட்சத்திற்கும் அதிகமான ஈழச்சொந்தங்கள் வசித்து வருகின்றனர். அவர்களில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள 110 அகதிகள் முகாம்களில் சுமார் 20,000 குடும்பங்களைச் சேர்ந்த 68,600க்கும் மேற்பட்டவர்களும், முகாம்களுக்கு வெளியே சுமார் 35,000 க்கு மேற்பட்டவர்களும் வாழ்ந்து வருகின்றனர். இவைத் தவிர சிறப்பு முகாம் என்கிற தடுப்பு முகாம்களிலும் ஈழத்தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களிலுள்ள குடியிருப்புகளில் பல போதிய இடவசதியின்றி நெருக்கடிமிக்கனவாகவும், சுகாதாரமற்ற முறையிலும், சரியான கழிப்பிட வசதிகளிலில்லாத பழைய இடிந்த குடியிருப்புகளாகவும் உள்ளன. எனவே, இக்குடியிருப்புகளில் நோய்த் தொற்றுவதற்கான வாய்ப்பு அதிகம் உள்ளதால் தமிழக அரசு உடனடியாக முகாம்களின் சுகாதாரத்தை ஆய்வுசெய்து போதிய அடிப்படை வசதிகளை உருவாக்கித் தருவதுடன், அங்கு வாழும் ஈழத்தமிழர்களின் உடல்நலத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டியது தலையாயக் கடமையாகிறது. தமிழகத்திற்குப் பணிபுரிய வந்த பிற மாநிலத்தவருக்குப் பேரிடர்கள் கால அத்தியாவசியப் பொருள்கள் இலவசமாக வழங்குவது குறித்து அறிவித்த தமிழக அரசு, நமது தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழர்களுக்கு பேரிடர்கால நிவாரண உதவிகள் அளிப்பது குறித்து எவ்வித அறிவிப்பையும் இதுவரை வெளியிடாதது மிகுந்த வேதனைக்குரியது.

எனவே, அகதி முகாம்களில் உடனடியாக தமிழக மறுவாழ்வுத்துறையின் மூலம் கொரோனோ நோய்த்தாக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. தமிழகத்தில் வாழும் ஈழத்தமிழர்களில் பெரும்பான்மையோர் அன்றாடம் வேலைகளைச் செய்து வாழ்வை ஓட்டும் நிலையில்தான் உள்ளனர். எனவே, தமிழக அரசு அமைப்புசாராத் தொழிலாளர்களுக்குத் தற்போது அறிவித்துள்ள நெருக்கடிகால நிதியுதவியை ஈழத்தமிழர்களுக்கும் வழங்கிட வேண்டும் எனவும், மேலும் அரசு அறிவித்துள்ள அனைத்து அத்தியாவசியப் பொருள்களும், நிதியுதவியும் முகாம்களில் வசிக்கும் ஈழத்தமிழர் குடும்பங்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் எனவும், மூன்று மாதங்களுக்கான இலவச எரிவாயு உருளை உள்ளிட்ட மத்திய அரசால் வழங்கப்பெறும் அத்தியாவசியப் பொருள்களுக்கான நிவாரண உதவிகள் ஈழத்தமிழர்களுக்கும் கிடைத்திடவும் தமிழக அரசு ஆவணச் செய்திட வேண்டும் எனவும் வலியுறுத்துகிறேன்.

மேலும், தமிழகச் சிறைகளிலுள்ள கைதிகளைக் கொரோனோ நோய்த்தொற்றுப் பரவுலை தடுப்பதற்காகச் சொந்தப் பிணையில் விடுவிப்பது போன்று, அடிப்படை வசதிகள் ஏதுமின்றி சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து ஈழத்தமிழர்களையும் உடனடியாக விடுவிக்க வேண்டுமென தமிழக அரசைக் கோருகிறேன். – இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# வற்றாப்பளை அம்மன் ஆலயத்தால் முல்லைத்தீவில் மனிதாபிமான பணி



முல்லைத்தீவு, மார்ச் 30

வரலாற்றுச் சிறப்பு மிக்க முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தால் வறுமை கோட்டுக்குள் வாழும் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரண பொதிகள் வழங்கும் மனிதாபிமான பணி முன்னெடுக்கப்பட்டது .

கொரோனா கிருமித் தொற்றின் எதிரொலியால் முழுநாடும் ஊரடங்கு நிலையால் முடங்கி போயுள்ள சூழலில் தினக் கூலிகளாக நாளாந்தம் உழைத்து உண்ணும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்கள் மிகவும் உணவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், அந்த வறுமை நிலையை போக்கும் நோக்கோடு முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தால் இந்த மனிதாபிமான நிவாரணப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற் கட்டமாக நேற்று கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 27 கிராம அலுவலர் பிரிவுகளுகளில் வசிக்கும் 500 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிவாரணப் பணியை கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திருமதி உமாமகள் ஆரம்பித்து வைத்தார்.நிவாரணப் பொதிகள் அடங்கிய வாகனம் வீடு வீடாகச் சென்று பொருள்கள் வழங்கும் பணியில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை

**31.03.2020**

**செவ்வாய்க்கிழமை**

நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.ப 2.43

திதி : ஸப்தமி மு.இ 11.16

இராகுகாலம் : 3.11 - 4.41

சுப நேரம் : 10.41 - 12.11

## கனடா பிரதமரின் மனைவி முற்றிலும் குணமடைந்தார்

ஒட்டாவா, மார்ச் 30

கனடா பிரதமர் ஜஸ்டினின் மனைவி கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்து விட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் கொவிட் – 19 வைரஸ் தொற்று 5,000க்கும் அதிகமானவர்களிடம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் மனைவி சோபியா ட்ரூடோவுக்கும் கொரோனா இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் தனிமைப்படுத்தப்பட்டார். பிரதமரும் தன்னைச் சுய தனிமைக்கு உட்படுத்திக்கொண்டார்.

சோபியாவுக்குத் தொடர்ந்து அவருக்குச் சிகிச்சை அளிக்கப் பட்டது. இப்போது அவர் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சோபியாட்ரூடோ தனது முகப் புத்தகத்தில், நான் முன்பை விட நலமாக இருக்கிறேன். எனக்கு வாழ்த்துகூறிய அனைவருக்கும் என் இதயத்தின் அடியிலிருந்து நன்றி கூறுகிறேன் என்று பதிவிட்டுள்ளார்.

உலகம் முழுவதும் கோவிட் – 19 காய்ச்சலுக்கு சுமார் 6 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# 32 ஆயிரத்துக்கு உயர்ந்தது சாவு

## 5 லட்சம் பேருக்குத் தொடர்கிறது தொற்று



லண்டன், மார்ச் 30

உயிர் குடிக்கும் கொள்ளை நோயான கொரோனாவால் இறந்தவர்களின் எண்ணிக்கை நேற்று முன்னிரவு வரை 32 ஆயிரத்து 239ஆக உயர்ந்துள்ளது. 5 லட்சத்து 7 ஆயிரத்து 393 பேருக்கு தொடர்ந்தும் தொற்று காணப்படுகின்றது. அவர்களில் 25 ஆயிரத்து 426பேரின்நிலைமைகவலைக்கிடமாக இருக்கின்றது.

மொத்தம் 6 லட்சத்து 86 ஆயிரத்து 32 பேருக்குத் வைரஸ் தொற்று ஏற்பட்டாலும் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 400 பேர் நோயிலிருந்து குணமடைந்துள்ளனர்.

ஆகக் கூடுதலான உயிரிழப்புக்கள் இத்தாலியில் பதிவாகி இருக்கின்றன. அங்கு 10 ஆயிரத்து 23 பேர் உயிரிழந்துள்ளனர். அதற்கு அடுத்தாக ஸ்பெயில் கூடுதலான உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. 6 ஆயிரத்து 606 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனாவில் 3 ஆயிரத்து 300 பேரும் ஈரானில் 2 ஆயிரத்து 640 பேரும் பிரான்சில் 2 ஆயிரத்து 314 பேரும் அமெரிக்காவில் 2 ஆயிரத்து 238 பேரும் பிரிட்டலில் ஆயிரத்து 228 பேரும் உயிரிழந்துள்ளனர்.

நேற்றைய தினம் மட்டும் 22 ஆயிரத்து 850 பேருக்குப் புதிதாகக் கொரோனா வைரசால் தாக்கப்பட்டுள்ளனர். ஆயிரத்து 382 பேர் உயிரிழந்துள்ளனர்.

நோயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக பிரிட்டன் முழுவதையும் முடக்குவதற்கு முயற்சிகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன.

# மலேசியாவில் மேலும் 7 பேர் உயிரிழப்பு!

மலேசியாவில் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பால் கடந்த 24 நான்கு மணி நேரத்தில் ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். ஒரே நாளில் உயிரிழந்தோர் எண்ணிக்கையில் இது புதிய உச்சமாகும். இதுவரை 34 பேர் அங்கு இறந்துள்ளனர்.

நேற்று ஒரே நாளில் புதிதாக 150 பேருக்கு நோய்த்தொற்று இருப்பதும் உறுதியானது. இதையடுத்து பாதிக்கப்பட்டோரின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 470 ஆக அதிகரித்திருக்கிறது.

இதேவேளையில் நேற்று மட்டும் 68 பேர் குணமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வெளியேறினர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்தது. இதுவரை மலேசியாவில் 388 பேர் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளனர்.

சில புள்ளி விவரங்களையும் மலேசிய சுகாதார அமைச்சு வெளியிட்டது. உயிரிழந்தவர்களில் சுமார் 55.6 வீத்தினர் 60 வயதைக் கடந்தவர்கள் என சுகாதார அமைச்சின் பொது ஆணையர் மருத்துவர் நூர் ஹிசாம் அப்துல்லா தெரிவித்தார்.

மேலும், இவர்களில் பலருக்கு நீரிழிவு, இரத்தக் கொதிப்பு உள்ளிட்ட உடல்நல பாதிப்புகள் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

மொத்தம் 67.6 விழுக்காட்டினருக்கு சிறுநீரக, இருதய நோய், நீரிழிவு உள்ளிட்ட நாட்பட்ட நோய்கள் இருந்துள்ளன. உயிரிழந்தவர்களில் 27 மற்றும் 37 வயதான ஆடவர்களும் அடங்குவர், என அவர் வருத்தத்துடன் குறிப்பிட்டார்.

உயிரிழந்தவர்களில் 91 வயது மூதாட்டியும் அடங்குவார்.. நோய்த்தொற்றால் உயிரிழந்தவர்களில் இவர்தான் மிக அதிக வயதுடையவர்.

இம்மூதாட்டிக்கும் நீரிழிவு, சிறுநீரக நோய், உயர் ரத்த அழுத்தம் உள்ளிட்ட உடல்நல பாதிப்புகள் இருந்ததாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. மார்ச் 26ஆம் திகதி மலாயா பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், நேற்றுக் காலை அம்மூதாட்டி உயிரிழந்தார்.

இந்நிலையில், 27 வயதான இளைஞர் ஒருவரையும் கொரோனா வைரஸ் பலி கொண்டுள்ளது. மலேசியாவில் பலியான 31ஆவது நபர் இவர். மார்ச் 27ஆம் திகதி கொரோனா வைரஸ் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இந்த இளைஞருக்கும் நீரிழிவு மற்றும் சிறுநீரக நோய் இருந்துள்ளது.

## கொரோனாவை எதிர்கொள்ள உலகம் ஒன்றிணைவேண்டும்

### பாப்பரசர் வேண்டுகோள்

கொரோனா வைரஸுக்கு எதிராக உலக நாடுகள் ஒன்றிணைய வேண்டும் என்று பாப்பரசர் பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

199 நாடுகளில் கொவிட் –19 வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள நிலையில் வத்திக்கான் உள்ளிட்ட தேபாலங்களிலும் ஆராதனைக்காக மக்கள் கூடுவது தடைப்பட்டுள்ளது. அடுத்த மாதம் வரவுள்ள உயிர்த்த ஞாயிறு தினத்திற்கு முன்னர் நிலமை சீரடையுமா என்கிற கேள்வியும் எழுந்துள்ளது. இந்த நிலையிலேயே கொரோனா வைரஸுக்கு எதிராக உலக நாடுகள் இணைய வேண்டும் என்று பாரப்பரசர் பிரான்சிஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸுக்கு எதிராக உலக நாடுகள் ஒன்றிணைய வேண்டும். போர்களை நிறுத்திவிட்டு எல்லைகளைக் கடந்து மனிதாபிமான உதவிகளைச் செய்யவேண்டும். துயரத்தில் இருப்பவர்கள் மீது கவனம் கொள்ளுங்கள் என்று தெரிவித்தார் பாப்பரசர்.

## ஈரானிய திரைப் படக் கலைஞர்கள் உலகக் கலைஞர்களுக்கு கடிதம்

# கொரோனா பாதிப்பு சமயத்தில் பொருளாதாரத் தடை சரியல்ல

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்றும் கேள்வி

நாடு கரோனா வைரஸ் தொற்றை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும்போது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை மனிதாபிமானமற்றது என்று ஈரானிய திரைக் கலைஞர்கள் உலகின் ஏனைய கலைஞர்களுக்கு எழுதிய கடிதத்தில்தெரிவித்துள்ளனர்.

மனிதாபிமானமற்ற உலகளாவிய பொருளாதாரத் தடைகளால் ஈரானின் சுவாசம் மட்டுப்படுத்தப்படுகிறது என்று புகழ்பெற்ற ஈரானிய திரைக் கலைஞர்கள் குழுவினர் எழுதிய அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

உலகக் கலைஞர்கள் சமுதாயத்தினருக்கு எழுதப்பட்டுள்ள இந்தக் கடிதம் மார்ச் 28 திகதியிடப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் 2016இல் கேன்ஸ் திரைப்பட விழாவில் அஸ்ஹர் ஃபர்ஹாடி இயக்கிய 'தி சேல்ஸ்மேன்' படத்திற்காக சிறந்த நடிகர் விருதை வென்ற ஹாஹப் ஹொஷைனி, உலகப் புகழ்பெற்ற ஈரானிய இயக்குநர் மஜித் மஜீதி மற்றும் ரக்ஷன் பனீட்மாட், பிரபல நடிகர் – திரைப்படத் தயாரிப்பாளர் – எழுத்தாளர் நிகி கரிமி, நடிகர் பாபக் கரிமி உள்ளிட்ட ஈரானைச் சேர்ந்த 302 திரைப்படத் துறையின் முக்கிய ஆளுமைகள் கையொப்பமிட்டுள்ளனர்.

அமெரிக்கா ஈரான் மீது அண்மையில் பொருளாதாரத் தடைகளை விதித்தது. இதுகுறித்து உலகக் கலைஞர்களுக்கு ஈரானிய திரைக் கலைஞர்கள் எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

"ஈரான் தற்போது மத்தியக் கிழக்கில் பரவியுள்ள மிக மோசமான கொரோனா நோய்த் தாக்குதலுக்கு எதிராகப் போராடுகிறது. எங்களைப் போன்ற உலகத்தில் உள்ள மற்ற நாட்டுக் கலைஞர்கள் அனைவரும் அரசியல்



வாதிகளும் எங்கள் வலியை நிச்சயம் உணர்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

அனைவரின் புவியியல் அல்லது அரசியல் சூழ்நிலையைப் பொருட்படுத்தாமல், ஒரு பொதுவான எதிரியாக நம் முன் நின்று நேருக்கு நேர் பேசுகிறது கொவிட் – 19. இந்த நுண்ணிய எதிரியின் தாக்குதலில் நாம் அனைவரும் சமமாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள்தான்.

இத்தகைய மோசமான தருணத்தில் ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அது நாட்டின் சுவாசத்தையே மட்டுப்படுத்தும் வேலையைச் செய்கிறது. இதன் காரணமாக பலவீனமான விளைவுகள் ஏற்படும். இது மனிதாபிமானமற்ற ஒரு தடை.

இந்த நெருக்கடி சிறிய அல்லது பேரழிவு இழப்புகளை ஏற்படுத்தும். எனினும் இதுவும் கடந்து போகும். ஆனால் இது தொடர்பான கதைகள் தொகுப்பாக அப்படியே இருக்கும்.

மருந்துகளின் பற்றாக்குறை மற்றும் அடிப்படை மருத்துவமனை வசதிகள் குறித்த கவலைகளை மறைக்கும்போது நோயாளிகளின் மன உறுதியை உயர்த்துவதற்காக அசுத்தமான மருத்துவமனைக் கூடங்களில் நடமாடும் செவிலியர்களின் கதைகள், மருத்துவமனைகளின் கூடங்களில் கொரோனா பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்க முயலும்போது, வாரக்கணக்கில் வீட்டிற்கு போகாமல் முகக் கவசங்கள், கையுறைகள், கவுன் இல்லாமல் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள மருத்துவர்களின் கதைகள்.

இவை அனைத்தும் நம் காலத்தின் நுண்ணிய வரலாற்று நினைவுகளில் தங்கியிருக்கும், விரைவில் அல்லது தாமதமாக, இந்த சோகக் கதைகள் எங்களிடமிருந்தோ அல்லது உங்கள் அனைவரிடமிருந்தோ கேட்கப்படும்.

உலகின் செல்வாக்கு மிக்க மற்றும் ஒன்றுபட்ட கலைஞர்களுக்கு ஈரானிய மக்களை மையமாகக் கொண்ட கதைகளைச் சொல்வது தாமதமாகாது என்று நம்புகிறோம். இதனால் உலகின் சக்திவாய்ந்த அரசியல் வாதிகள் சரியான தேர்வுகளை எடுக்கக்கூடும்,

நோய்த் தொற்றில் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடுபவர்கள் (மிகவும் பாதிக்கப்படக்கூடிய முதியவர்கள் உட்பட) மருத்துவப் பொருள்களின் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர். உலகின் அருமைக் கலைஞர்களே இதுகுறித்து – நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் என்ன செய்வீர்கள்?. – இவ்வாறு ஈரானிய திரைக் கலைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

# தமிழகத்தில் தொற்று 50 பேராக உயர்ந்தது!

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் 50ஆக உயர்ந்தது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. தமிழ்நாட்டிலும் கடந்த சில தினங்களாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே வருகிறது.

நேற்று மதியம் வரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 42 ஆக இருந்தது. மாலையில் தமிழக சுகாதாரத்துறை செயலாளர் பீலா ராஜேஷ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது "புதிதாக 8 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் நான்கு பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்"எனத் தெரிவித்தார்.

மேலும், "ஐந்து பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்றும், அதில் சிலர் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்" என்றும் தெரிவித்தார். இதன்மூலம் தமிழகத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 50ஐ தாண்டியுள்ளது.

# ஊரடங்கைக் கடுமையாக செயற்படுத்தும்படி உத்தரவு

## மாநில அரசுகளுக்கு விடுத்தது மத்திய அரசு

இந்தியாவில் புதன்கிழமை அதிகாலை முதல் 3 வாரங்களுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கை கடுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதனை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஊரடங்கு நேரத்தில் மக்கள் தேவையின்றி வெளியே வர தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்ல மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனாலும் அதை மதிக்காமல் சிலர் வெறியில் சுற்றித் திரிகின்றனர். அத்துடன் புதுடில்ல போன்ற பெரு நகரங்களில் தங்கியிருந்த புலம்பெயர் தொழிலாளர்களும் தமது வீடுகளுக்குக் கூட்டம் கூடடமாகத் திரும்பி வருகின்றனர்.

இதையடுத்து ஊரடங்கை கடுமையாக நடைமுறைப்பத்த வேண்டும் எனவும், அதனை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் வெளியே வர விடாமல் தடுத்து அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிளையும் வழங்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது

# ஊரடங்கை மீறிய நபருக்கு கிட்டிய வினோத தண்டனை


இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் ஊரடங்கு நேரத்தில் அத்துமீறி வெளியே சுற்றிய இளைஞரின் நெற்றியில் 'ஊரடங்கை மீறி வெளியே வந்துள்ளேன்; என் அருகில் வராதீர்கள்' என எளிதில் அழியாத மையால் பெண் காவல் உதவி ஆய்வாளர் எழுதிய விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த சமூக விலகல் அவசியம் என்பதால் கடந்த புதன்கிழமை முதல் இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஏப்ரல் 14ஆம் நாள் வரையில் 21 நாள்களுக்கு இது தொடரும்

இந்த நிலையில் மத்திய பிரதேசத்தில் சத்திரபூரில் ஊரடங்கு நேரத்தில் இளைஞர்கள் வெளியே சுற்றித் திரியும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்த வண்ணம் உள்ளன.

இதையடுத்து கோரிஹார் என்ற இடத்தில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வந்த பெண் காவல் உதவி ஆய்வாளர் அமிர்தா அங்கு அத்துமீறி வெளியே சுற்றிய இளைஞர் ஒருவரை தடுத்து நிறுத்தினார்.

அந்த இளைஞரின் நெற்றியில் 'ஊரடங்கை மீறி வெளியே வந்துள்ளேன்; என் அருகில் வராதீர்கள்' என எளிதில் அழியாத மையால் எழுதியுள்ளார். இந்த விவகாரம் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. சமூக வலைத் தளங்களில் பலரும் இதற்குக் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.



# ஆயிரத்தை எட்டியது இந்தியாவில் தொற்று

இந்தியாவில் கொரோனா பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை எட்டியுள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது

இந்தியாவில் பெப்ரவரி மாதத்தில் கொரோனா வைரஸ் முதன்முதலாக கண்டறியப்பட்டது. அப்போது முதல் மெதுவாக அதிகரிக்கத் தொடங்கிய கொரோனா வைரசின் தாக்கம், மார்ச் மாதத்தில் அதிகரிக்க தொடங்கியது.

கடந்த ஒரு வாரத்தில் மளமளவென அதிகரித்து விஸ்வரூபம் எடுக்க தொடங்கியுள்ளது. குறிப்பாக கேரளா மற்றும் மகாராஷ்டிரா மாநிலத்தில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சகத்தின் அறிக்கையின்படி இந்தியாவில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டி 1024 ஆக உயர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று புதிதாக 23 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக 72 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மகாராஷ்டிரா மாநிலத்தில் புதிதாக 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதுடன் அந்த மாநிலத்தில் பாதித்தவர்களின் எண்ணிக்கை 203 ஆக அதிகரித்துள்ளது.

கேரளாவில் 20 பேருக்கு புதிதாக உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 202 ஆக அதிகரித்துள்ளது. தமிழகத்தில் 50 பேரும், கர்நாடகாவில் 83 பேரும், பீகாரில் 15 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# ஊரடங்கை மீறி தொழுகைக்கு அழைப்பை விடுத்த மதகுரு கைது

ஊரடங்கு உத்தரவு மற்றும் சமூக விலகலை மீறி வெள்ளிக்கிழமைத் தொழுகைக்காக மக்களைத் திரட்டிய மதகுரு ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க இந்தியா முழுவதிலும் ஏப்ரல் 14 வரை ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கோயில்கள், மசூதிகள், தர்காக்கள், தேவாலயங்கள், குருத்வாராக்கள் என அனைத்து வழிபாட்டு தலங்களில் மக்கள் ஒன்றுகூட விதிவிலக்கு அளிக்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம், வெள்ளிக்கிழமை தொழுகைக்காக முஸ்லிம்கள் ஒன்றுகூட வேண்டாம், தனித்தனியாக வீடுகளிலேயே தொழுகை நடத்துங்கள் என உத்திரப்பிரதேச காவல்துறை கேட்டுக் கொண்டது. இதைப் பெரும்பாலான முஸ்லிம் அமைப்புகள் ஏற்றுக்கொண்டு, தங்கள் சமூகத்தினரிடம் வலியுறுத்தின. எனினும் புலந்த்ஹெர், ஹர்தோய் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் முஸ்லிம்கள் ஒன்றுகூடி தொழுகை நடத்தியுள்ளனர்.

ஜஹாங்கிராபாத் மற்றும் டிபய் பகுதியில் வழக்கம்போல் வெள்ளிக்கிழமை தொழுகைக்காக முஸ்லிம்கள் ஒன்று கூடுவதாக தகவல் கிடைத்தது. நேரில் செல்வதற்குள் பலரும் தப்பி விட்டனர். இங்கு ஊரடங்கை மீறி தொழுகையை நடத்திய மதகுருவைக் கைது செய்ததுடன், 21 பேர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளோம் என்றார் புலந்த்ஹெர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தோஷ்குமார்.

ஹர்தோய் மாவட்டத்தில் கடந்த 3 தினங்களாக ஊரடங்கை மீறி ஒன்றுகூடித் தொழுகை நடத்தியதாக சுமார் 150 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாநிலம் முழுவதிலும் சுமார் 4,000 பேர் மீதுபோலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதுபோல் உத்தரபிரதேசத்தின் மெயின்புரியில் உள்ள பிரபல காளி கோயிலில் பூசை செய்ய ஒன்றுகூடியதாக 38 பேர் மீது வழக்குப் பதிவாகி உள்ளது. இவர்களில் 3 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# கொரோன வைரஸ் பாதிப்பை விட ஊரடங்கின் விளைவு மோசமாகும்

## ராகுல் காந்தி எச்சரிக்கை



கொரோனா வைரஸ் பாதிப்பால் ஏற்படும் தாக்கத்தைவிட இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திடீர் ஊரடங்கால் ஏற்படப்போகும் விளைவுகள் மோசமானவையாக இருக்கப்போகின்றன என்று எச்சரித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி.

இந்தியாவில் அறிவிக்கப்பட்டுள்ள 21 நாள் ஊரடங்கு உத்தரவால் தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், சிறு, குறு தொழில்கள், கடைகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. ரயில் போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பணியாளர்களுக்கு மட்டும் பேருந்து சேவை இயக்கப்படுகிறது.

இந்த திடீர் ஊரடங்கு உத்தரவால் ஏராளமான தொழிலாளர்கள், கூலித் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். நிறுவனங்கள், தொழிற்சாலைகள் மூடப்பட்டதால், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் கூட்டம் கூட்டமாக தங்கள் சொந்த மாநிலத்துக்குத் திரும்புகின்றனர்.

அவர்களுக்குப் பேருந்து கிடைக்காததால், நடந்தே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு கூட்டமாகச் செல்வது கொரோனாவை வரவேற்பது போன்றதாகும் என்பதால் அதைத் தவிர்க்குமாறு பல்வேறு மாநில அரசுகளும் கேட்டுக் கொண்டுள்ளன.

இந்நிலையில் ஊரடங்கு குறித்து பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறப்பட்டிருப்பதாவது:

"கரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த வளர்ந்த நாடுகளில் ஊரடங்கு உத்தரவுக்குப் பதிலாக வேறு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். இந்தியாவின் சூழல் மிகவும் வித்தியாசமானது என்பதை நாம் புரிந்துகொள்வது முக்கியம்.

முழுமையான ஊரடங்கு உத்தரவைப் பின்பற்றும் நாடுகள் பின்பற்றுவதைக் காட்டிலும் வேறு வித்தியாசமான நடவடிக்கைகளை எடுத்திருப்பது அவசியம். நாள்தோறும் கிடைக்கும் ஊதியத்தை நம்பி வாழும் கூலித் தொழிலாளர்கள், ஏழைகள் இருக்கும் நாடு இந்தியா. திடீரென ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதால், பொருளாதாரச் செயல்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

முழுமையான பொருளாதார முடக்கத்தின் விளைவு, கொரோனா மூலம் உருவாகும் உயிரிழப்புகளைவிட மோசமாக இருக்கும் என அஞ்சுகிறேன். திடீரென அறிவிக்கப்பட்ட ஊரடங்கால் மக்களிடையே பெரும் பதற்றத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தொழிற்சாலைகள், சிறு தொழில்கள், கட்டுமான தொழில்கள் மூடப்பட்டதால், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தங்களின் சொந்த மாநிலத்துக்குச் செல்கிறார்கள். தினந்தோறும் ஊதியம் இல்லாமல், அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யாமல் தொழிலாளர்கள் இருப்பும் கடினம்.

இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்

# கொரோனா: தீண்டத் தகாதது!

இது தொடு திரை உலகம். ஆனால் இப்பொழுது தொடுகையே பாவம் என்றாகி விட்டது. ஒருவர் மற்றவரைத் தொட்டால் நோய் தொற்றிக் கொள்ளும் என்ற நிலை. இதனால் மனிதர்கள் ஒவ்வொருவரும் மற்றவரிலிருந்து விலகி நடக்கிறார்கள். வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

பூமி முழுவதும் பெரும்பாலான நாடுகளில் ஒன்றில் ஊரடங்குச் சட்டம் அல்லது சனங்கள் தாங்களாகவே தங்களை வீடுகளுக்குள் அடைத்துக் கொள் ளும் ஒரு நிலை. நோயில் வாடும் ஒருவருக்கு மருந்து மட்டும் போதாது. அருகிலிருந்து அன்பாக யாராவது கவனிக்க வேண்டும். அருகில் இருப்பவரின் அன்பான அரவணைப்பு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். அன்பைத் தவிர வேறு அரு மருந்து கிடையாது.

ஆனால் வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர் உங்களுக்கு எவ்வளவுதான் நெருக்கமானவராக இருந்தாலும் நீங்கள் அவருக்கு அருகே இருக்க முடியாது. அவருடைய கைகளை ஆதரவாகப் பற்றிக் கொண்டோ அல்லது அவருடைய தலையை அரவணைப்பாக வருடிக் கொடுத்தோ உங்களுடைய அன்பைக் காட்ட முடியாது. அப்படிச் செய்தால் உங்களுக்கும் வைரஸ் தொற்று வரும்.

சிலசமயம் அவர் இறந்தால் நீங்கள் தூர இருந்து அவர் மூச்சுத்திணறி இறப்பதை இயலாத் தனத்தோடு பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர வேறு எதையும் செய்ய முடியாது. அவரைத் தொட்டு அழவும் முடியாது. தூர இருந்தே அழவேண்டும். இறந்தபின் அந்த உடல் உங்களுக்குச் சொந்தமானது அல்ல. அது அரசாங்கத்திற்கு உரியது. அதை நீங்கள் அடக்கம் செய்யவோ தகனம் செய்யவோ முடியாது.

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவரின் உடலைப் போல. அரசாங்கம் தான் அதைச்செய்யும். சில சமயங்களில் நீங்கள் அந்த இறுதிக் கணங்களை கிட்ட இருந்து பார்ப்பதற்கும் அனுமதி. அன்றேல் தூர நின்று பார்ப்பதற்கும் அனுமதி இல்லை. இறுதி வணக்கம் செலுத்தவும் அனுமதி இல்லை.

'என்னுடைய தகப்பனை ஒரு நாயைப் போல, ஒரு பன்றியைப் போல இறக்க விட்டேன்' என்று ஓர் இத்தாலியப் பெண் அழுகிறார். அதாவது அவருடைய தந்தையை ஒரு மனிதருக்குக் கொடுக்க வேண்டிய இறுதி மரியாதைகள் எவையும் இன்றி, சடங்குகள் எவையும் இன்றி, மிருகங்களைப் போல அடக்கம் செய்யவேண்டி வந்தது என்று அவர் கூறுகிறார்.

### சடங்குகளற்ற தகனங்கள்

மனித நாகரீகம் எனப்படுவது மிருகங்களிடம் இருந்து வேறுபட்ட பிரதானமான இடங்களில் அது ஒன்று. இறந்த உடலை மதிப்பது அதற்கு உரிய மரியாதையைக் கொடுத்து அடக்கம் செய்வது. ஆனால் மனித நாகரிகத்தின் தொடக்கப் புள்ளிகளில் ஒன்றாகிய அந்த விடயமே இப்பொழுது ஆபத்தானது ஆகிவிட்டது.

மனிதர்கள் ஒருவர் மற்றவரை தொட்டுக் கொள்ளாமல் அன்பு காட்டுவது எப்படி? தாய்மையை, தந்தைமையை, காதலை, பாசத்தை, சகோதரத்துவத்தை தொடாமல் எப்படி வெளிக் காட்டுவது?

மிருகங்கள் கூட, பூச்சிகள் கூட அதைத் தொடுகை மூலம்தான் வெளிப்படுத்துகின்றன. மனிதக் கூர்ப்பில் தொடக்கத்திலிருந்தே தொடர்ச்சியறாமல் காணப்படும் ஓர் அம்சம் அது. அன்பை, காதலை ஸ்பரிசம் மூலம் வெளிப்படுத்துவது. ஆனால் இப்பொழுது அது ஆபத்துக்குள்ளாகி இருக்கிறது. மனிதர்கள் மனிதர்களைத் தொடுவது மட்டுமல்ல நோயாளிகள் தொட்ட எதையுமே குறிப்பாகக் காசையும் கூட தொட முடியாத ஒரு நிலை.



இதனால் பெருமளவிற்கு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் மனிதர்கள் வீட்டுக்குள் அடைந்து கிடக்கிறார்கள். ஆள்களற்ற தெருக்களைப் பாடல்களால் நிரப்புகிறார்கள். ஆசிய, ஐரோப்பிய நகரங்களில் ஊரடங்கு அல்லது ஊரடங்கு போல வீடுகளுக்குள் முடங்குவது. இது ஏறக்குறைய ஒரு யுத்த காலத்தை ஒத்தது.

'நமது பெற்றோரை போருக்கு வாருங்கள் என்று அழைத்தார்கள். நாங்கள் உங்களை வீடுகளுக்குள் இருங்கள் என்று அழைக்கிறோம்' என்று இத்தாலிய பிரதமர் கூறினார். இந்த தொடுதிரை உலகைப் பொறுத்தவரை அதிர்ச்சி யூட்டும் ஒரு மாற்றம். எனினும் வெள்ளைக்காரர் கள் அதை சந்தோமாக எதிர்கொள்வதாகவே தெரிகிறது.



இது தொடு திரை உலகம். ஆனால் இப்பொழுது தொடுகையே பாவம் என்றாகி விட்டது. ஒருவர் மற்றவரைத் தொட்டால் நோய் தொற்றிக் கொள்ளும் என்ற நிலை. இதனால் மனிதர்கள் ஒவ்வொருவரும் மற்றவரிலிருந்து விலகி நடக்கிறார்கள். வீட்டுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கிறார்கள்.

நோர்வேயில் வசிக்கும் ஒரு ஈழத் தமிழர் சொன்னார், வேர்ச்சுவல் அலுவலகங்களை இயக்குவதற்காக பயன்படுத்தப்படும் செயலிகளை பயன்படுத்தி இளைஞர்கள் குடித்து மகிழ்வதாக. திடீரென்று வீட்டுக்குள் முடக்கப்பட்ட மனிதர்கள் இணையத்தின் மூலம், செயலிகள் மூலம் இணைக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்லாது இணைய வேகத்துக்கு ஈடு கொடுத்து ஓய்வின்றி ஓடிக்கொண்டிருந்த மனிதர்கள் இப்பொழுது ஓய் வாக இருக்கிறார்கள். வாசிக்கிறார்கள், யோசிக்கிறார்கள், மனைவி பிள்ளைகளோடு ரிலாக்ஸாக இருக்கிறார்கள்.



இலங்கையில் சிலர் மனைவிமார்களை அடிக்கிறார்கள். எதுவாயினும் வழமைக்கு மாறாக அதிர்ச்சியூட்டும் விதத்தில் கிடைத்திருக்கும் இந்த ஒன்று கூடலை மனிதர்கள் அனுபவிக்கிறார்கள். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை யுத்த காலத்தில் ஊரடங்கு நாள்களில் அவர்கள் வீடுகளுக்குள் சிறிய அளவில் ஒன்று கூடுவார்கள். தாயம் விளையாடுவார்கள், கரம் விளையாடுவார்கள், காட்ஸ் விளையாடுவார்கள். இப்போது இணையம் வந்து மேற்சொன்ன விளையாட்டுக்களை மாற்றீடு செய்துவிட்டது.

எனினும், பூனை தன் குட்டிகளைக் காவுவது போல குறிப்பாக பெண் பிள்ளைகளைப் பள்ளிக் கூடத்துக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும் காவிக் கொண்டு திரிந்த பெற்றோர் இப்பொழுது பிள்ளைகளோடு ரிலாக்சாக இருக்கிறார்கள். மனம் விட்டுக் கதைக்கிறார்கள். அப்படிக் கதைப்பதற்கு நேரம் இருக்கிறது. அதுமட்டுமல்லாது பூகோள மயப்பட்ட உலகில் எல்லாவற்றுக்கும் மற்றவர்களோடு நிபந்தனையின்றி பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு வாழ்க்கைச் சுழலுக்குள் பல்பொருள் அங்காடிகள் மைய வாழ்வுக்கு பழக்கப்பட்ட சமூகங்கள் இப்பொழுது உணவுக்கு தமது வீட்டு வளவுக்குள்ளேயே எதையா வது தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய ஒரு நிலை.

தனது வீட்டுக்குள்ளேயே தனக்கு வேண்டிய காய்கறிகளை வளர்க்கலாமே என்று சிந்திக்கும் ஒரு காலகட்டம். அதாவது அதிகபட்சம் தற்சார்பான, தன்னிறைவான உணவு முறை குறித்து அதிகம் சிந்திக்க வேண்டிய ஒரு தேவை. ஒருகாலம் எங்களிடம் உயிர் வேலி இருந்தது. அந்த உயிர் வேலியில் அரிய மூலிகைகள் விளைந்தன.

ஒவ்வொரு நாளும் சுண்டிச் சாப்பிட அல்லது மசித்துச் சாப்பிட ஏதோ ஒரு காய்கறி அந்த வேலியில் விளைந்தது. ஆனால் பல்பொருள் அங்காடி மய வாழ்க்கை வந்தபின் எல்லாமும் 'பக்கேஜ்' ஆகி விட்டன. கொரோனா வைரஸ் வந்து அந்த வாழ்க் கைச் சுழலுக்குள் இடையீடு செய்திருக்கிறது. இது தீமைக்குள் விளைந்த ஒருநன்மை.

இதுபோன்ற பல நன்மைகளை அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். இப்பொழுது தெருக்களில் வாகனங்கள் குறைவு. எனவே காற்றில் புகை குறைவு. கடலில் கப்பல்கள் குறைவு. விமான நிலையங்களில் விமானங்கள் தூங்குகின்றன. மிகக் குறுகிய காலகட்டத்துக்குள் சுற்றுச்சூழல் மாசாக்கம் சடுதியாகக் குறைந்துவிட்டது என்று கூறப்படுகிறது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சீயோன் தேவாலயக் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி கல்கிஸையில் நேற்றுக் கைது

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் கடந்த வருடம் ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குலை வழிநடத்திய பிரதான சந்தேகநபர் குற்ற விசாரணைத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

கொழும்பு, கல்கிஸையில் நேற்று இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார். ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று மட்டக்களப்பு மத்திய வீதியிலுள்ள சீயோன் தேவாலத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தமையுடன், 83 பேர் படுகாயமடைந்தனர்.

## யாழ் மண்டைதீவு கிழக்குக் கடலில் கரையொதுங்கிய சிவன் கற்சிலை!



நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை,யாழ் தீவகம் மண்டைதீவு கிழக்குக் கடற்கரையில், சிவபெருமானின் கற்சிலை ஒன்று கரையொதுங்கியுள்ளதாக தெரிய வருகின்றது. பொதுமக்களால் சிலை மீட்கப்பட்டு, கடற்கரையில் இருந்து எடுத்துவரப்பட்டு, துப்புரவு செய்யப்பட்ட பின்னர் கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு அருகில் ஆலமரத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளதாகவும். மக்கள் வந்து அதனைப் பார்வையிட்டுச் செல்கின்றனர் எனவும் மண்டதீவிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

## கொரோனா: தீண்டத்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இடத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். சீனா முகமூடி அணியத் தொடங்கியது கடந்த சில மாதங்களாக மட்டும் அல்ல. கொரோனா வைரஸுக்கு முன்னரே சீனர்கள் மாநகரங்களில் முகமூடி அணியத் தொடங்கி விட்டார்கள். ஏனெனில் காற்று மாசாகத்தின் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் 11 இலட்சம் சீனர்கள் இறக்கிறார்கள்.

இது, சீனாவில் இதுவரையிலுமான கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்ட இறப்பு விகிதத்தை விடப் பலமடங்கு அதிகமானது. இப்படிப் பார்த்தால் கொரோனா வைரஸின் தாக்கத்தால் சுற்றுச்சூழல் ஒப்பீட்டளவில் சுத்தமாகியிருக்கிறது. இயற்கை தன்னை ஏதோ ஒரு விகிதமளவுக்காவது சமநிலைப் படுத்திக்கொள்ள அவகாசம் கிடைத்திருக்கிறது.

அதேசமயம், மனிதர்களும் இயற்கைக்கும் தமக்கும் இடையிலான ஒரு புதிய சமநிலை குறித்து சிந்திக்க வேண்டிய காலம். ஒருபுறம் பூகோளமயமாதல் அதன் இயலாமையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இன்னொருபுறம் தகவல் புரட்சி மட்டும் மனிதனுக்கு இன்பத்தைத் தராது. அதை விடவும் அதிகமான இன்பங்கள் வாழ்க்கையில் உண்டு என்பதனை ஓர் உலக பெருந்தொற்று நோய் உணர்த்தியிருக்கிறது.

இலத்திரனியல் இன்பம் மட்டும் போதாது என்று கருதிய ஐரோப்பியர்கள் வீட்டில் முடங்கி இருக்கும் பொழுது பல்கனிகளில் நின்றபடி கைகளைத் தட்டிப் பாடுகிறார்கள். அதுமட்டுமல்ல உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் ஒரு பேருண்மையை போட்டுஉடைத்திருக்கிறார்.

வைரஸின் தாக்கத்திலிருந்து தப்புவதற்காக அவர் கூறும் ஆலோசனைகளில் ஒன்றில் மனிதர்கள் ஒரு நாளைக்கு ஒரு தடவை அல்லது இரு தடவை மட்டும் செய்திகளை வாசிப்பது நல்லது என்று அவர் கூறுகிறார். ஏன் அப்படி கூறுகிறார்? செய்திகளுக்குப் பதிலாக வதந்திகளே மனிதர்களை வேகமாக வந்தடைகின்றன. இது ஒரு பெருநோயை எதிர்கொள்வதற்கான உளவியல் தயாரிப்பைப் பலவீனமாக்கிறது.

எனவேதான் தகவல் யுகத்தில் ஓர் உலகப் பொது நிறுவனத்தின் தலைவர் குறைந்த அளவு தகவல்களை நுகருங்கள் என்று கூறும் ஒரு நிலைமை. எனவே கொரோனா வைரஸுக்குப் பின்னரான உலகம் எனப்படுவது அரசியல், சமூக, பொருளாதார மற்றும் உளவியல் அர்த்தத்தில் ஒரு புதிய வடிவத்தை பெறுமா?

இலங்கைத் தீவில் ராஜபக்ஷக்கள் கொரோனாவை வைத்துத் தமது அரசியல் வெற்றிகளைத் திட்டமிடத் தொடங்கி விட்டார்கள். இராணுவத் தளபதிக்கும் படைத் தரப்புக்கும் வெள்ளை அடிப்பதற்கு இது மிகச்சிறந்த ஒரு தருணம் என்று அவர்கள் கருதக் கூடும். அதுமட்டுமல்ல பொதுமக்களைப்கொன்ற தற்காக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட படை வீரருக்கு மன்னிப்புக் கொடுப்பதற்கும் இதுதான் தருணம் என்று அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

கொரோனாக் காலத்திலும் இனவாதம் பதுங்கவில்லை. ராஜபக்ஷக்களைப் பொறுத்தவரை கொரோனா ஒரு வரப்பிரசாதம். தமிழ் மக்களைப் பொறுத்தவரை கொரோனா வைரஸுக்கு முன்னரே தமிழ் மக்களிடம் தீண்டாமை இருந்தது. அது தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எதிரானது. சுமார் 38 ஆண்டு கால ஆயுதப்போராட்டத்தின் பின்னரும் தமிழ் மக்கள் மத்தியில் தீண்டாமையானது வைரஸைப் போல தன்னை அப்டேட் செய்து வருகிறதா?

2009 இற்குப் பின்னரான கடந்த 10 ஆண்டுகால அரசியலில் சாதியின் பெயராலும், சமயத்தின் பெயராலும், பிரதேச வாதத்தின் பெயராலும் தமிழ் மக்களைக் கூறுபோடும் நிலைமைகளே அதிகரித்து வருகின்றன. தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் கொரோனாக்கள் அதிகரித்து வந்த ஒரு சூழலில் நாடாளுமன்றத் தேர்தல் ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. எனினும், யாழ்ப்பாணத்துக்கு வைர ஸைக் கொண்டுவந்தவர் என்று ஒரு போதகரைச் சுட்டிக்காட்டி அதன் பெய ரால் தமிழ் மக்களை மத ரீதியாகப் பிரித் துத் தோற்கடிக்க முற்படும் சில வைரஸ்கள் தீவிரமாகப் பரவி வருகின்றன. கொரோனாவை வெற்றி கொண்டபின் உடனடியாக இந்த வைரஸ்களுக்கு தமிழ் மக்கள் மருந்து கண்டு பிடிக்க வேண்டி இருக்கும்.

நன்றி – ஆதவன்

## கொழும்புத்துறையில் நிவாரணப் பொருள்கள் கையளிப்பு



யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், நோயவாய்ப்பட்டோர் மற்றும் அங்கவீனமுற்றோர் போன்றவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்பட்டன. யாழ். மாநகர பிரதி முதல்வர் து.ஈசனின் வேண்டுகோளுக்கு இணங்க ரெலோ கட்சியின் தேசிய அமைப்பாளர் சுரேந்திரனின் சொந்த நிதியில் 120 குடும்பங்களுக்கு இப்பொதிகள் வழங்கப்பட்டன. இவ்விநியோகத்தில் பிரதி முதல் வர் து.ஈசன், நல்லூர் பிரதேச சபையின் பிரதித் தவிசாளர் ஜெயகரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ் ஆகியோர் பங்குபற்றினர்

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.03.2020 இல் வெளியிடப்பெற்றது.

# முதலாம் ஆண்டு நினைவில்

அன்னை மடியில்
14.01.1958

கனகாம்பிகை அடியில்
11.04.2019



அமரர்

## பாலச்சந்திரன் தவமணி

[திருவையாறு – கிளிநொச்சி]

**முன்னாள் நூலக உதவியாளர்**

கரைச்சி பிரதேசசபை –கிளிநொச்சி

**(திதி: 30.03.2020)**

குன்றுமணி விளக்கே -எங்கள்
குல தெய்வமே !
வல்லமையாய் வாழ்ந்து
வழிநடத்திய எம் அன்னையே
உம்மைப் போன்று அன்பு செய்ய
யாரும் இல்லை இவ் உலகில்
நிழற்குடையாய் எம்மை நித்தமும் காத்தாய்
விழி மூட மறுக்குதம்மா -உந்தன்
இமை மூடி போனதனால் !
ஊருக்கே ஒளியூட்டி
அன்னை கனகாம்பிகையை சரணடைந்து
ஓராண்டு கடந்த பின்பும்
மீளாது உம் நினைவில் தவிக்கிறோம் அம்மா ....

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !**

தகவல்:
குடும்பத்தினர்
59/7 பொற்பதிவீதி
கொக்குவில்கிழக்கு
கொக்குவில்,யாழ்ப்பாணம்
0212220308,0778691045

# பட்டதாரிப் பயிலுநர்கள் இன்று அறிக்கையிடும் அவசியமில்லை

கொழும்பு, மார்ச் 30

பட்டதாரி பயிலுநர் நியமனம் பெற்றவர்கள் மார்ச் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது கடமை நிலையங்களில் அறிக்கையிட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாட்டில் நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்ட விதிகளின் அடிப்படையில் மறு அறிவித்தல்வரை பட்டதாரிப் பயிலுநர் அறிக்கையிடுவது அவசியமில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.ஹெட்டியாராச்சி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

பட்டதாரிப் பயிலுநர் நியமனம் வழங்கப்பட்ட 45 ஆயிரத்து 585 பேரையும் இன்று திங்கட்கிழமை கடமை நிலையங்களில் அறிக்கையிடுமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நாட்டில் நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்ட விதிகளில் ஒன்றான மாவட்டத்தைவிட்டு மற்றொரு மாவட்டத்துக்குச் செல்ல முடியாத நிலை பட்டதாரிகள் பலருக்கு ஏற்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்ற ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தோருக்கு நியமனம் கிடைத்த போதும் இங்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படாமல் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை கடமை நிலையத்துக்குச் சென்று அறிக்கையிட முடியாது என்று பாதிக்கப்பட்ட பலர் தெரிவித்திருந்தனர்.

நாடு முழுவதும் 6 மாவட்டங்களில் இந்தப் பிரச்சினை உள்ள நிலையில் மறு அறிவித்தல்வரை பட்டதாரிப் பயிலுநர் அறிக்கையிடுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொரோனாத் தொற்றாளிகளுக்கு பரீட்சார்த்த மருந்து வந்து சேர்ந்தது

இன்புளுவன்ஸா எதிர்ப்பு மருந்தான AVIGAN கொரோனா வைரஸ் தொற்றாளிகளுக்கு பரீட்சாத்த ரீதியாக அடுத்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளது.

அரச அதிகாரி ஒருவரை மேற்கோளாட்டி ஆங்கில செய்தித்தாள் ஒன்று இதனை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஜப்பான் மற்றும் சீனாவினால் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ள AVIGAN' வில்லைகள் இன்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்படவுள்ளதாக அதன் தலைவர் வைத்தியர்



பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

இது கொரோனா வைரஸுக்கான முழுமையான மருந்தாக இல்லாதபோதும் பதிலாக பயன்படுத்தக்கூடியது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வில்லை உலகளாவிய ரீதியில் எபோலவைரஸ் பரவலின் போது பயன்படுத்தப்பட்டதாக பிரசன்ன குணசேன சுட்டிக்காட்டியுள்ளார்.

பூஜுறூபுஹி' கொரோனா வைரஸுக்கு தகுந்த மருந்து என்பது நிரூபிக்கப்பட்டால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் அதிகளவில் அதனை கொள்வனவு செய்யும் என்றும் கூட்டுத்தாபன தலைவர் தெரிவித்துள்ளார்.

# டிக்கோயா தேவாலயத்தில் போதகருடன் ஒன்பது பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்



அட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா – தரவளை பகுதியில் அமைந்துள்ள தேவாலயத்தின் மத போதகர் உட்பட ஒன்பது பேர் தேவாலயத்துக்குள்ளேயே நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இருந்து வருகைதந்திருந்த மதபோதகர் ஒருவருடன் இணைந்து ஆராதனைக் கூட்டம் நடத்தியமை, யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டமை ஆகியவற்றாலேயே இந்த மதபோதகரும், அவருடன் நெருங்கிப்பழகியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:–

தமிழகம் திருநெல்வேலியிலிருந்து கடந்த 11 ஆம் திகதி பாலசேகர் எனும் மதபோதகர் இலங்கை வந்துள்ளார். அதன் பின்னர் தரவளை தேவாலயத்திலுள்ள மதபோதகர் அவரை அட்டனுக்கு அழைத்துவந்துள்ளார்.

12, 13, 14, 15 ஆம் திகதிகளில் தரவளையில் ஆராதனைக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒருநாள் கூட்டத்தில் சுமார் 60 பேர்வரை கலந்து கொண்டுள்ளனர்.

அதன்பின்னர் திருநெல்வேலி போதகரும், இவரும் யாழ்ப்பாணத்துக்கு சென்று அங்கு 16, 17 ஆம் திகதிகளில் ஆராதனைக் கூட்டங்களை நடத்தியுள்ளனர்.

கொழும்பு வந்து திருநெல்வேலி போதகரை அனுப்பிவிட்டு தரவளை பகுதி போதகர், தேவாலயம் வந்துள்ளார். அதன் பின்னரும் ஆராதனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள் தொடர்பில் தகவல்கள் வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அந்த நடைமுறையை இந்தப் போதகர் பின்பற்றவில்லை. தன்னை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையிலேயே நேற்று முதல் அவரும் அவருடன் தொடர்பை பேணிய 8 பேரும் தேவாலயத்திலேயே தனிமைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆராதனைக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

காலைக்கதிர் Kalaikathir

# ஆலய வழிபாடு



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது

## தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

**இன்று (30/03/2020) தலைப்பு ஆலய வழிபாடு**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# மனிதன் மனிதனுக்கு பயந்து ஒழித்த காலம் மாறி மனிதன் நோய்க்கு ஒழிக்கும் காலம் வந்துள்ளது!

## அரியநேத்திரன் கூறுகின்றார்

மட்டக்களப்பு,மார்ச்30

இன்று உலகம் முழுவதும் கொடிய நோய் கொரோனா வைரஸ் பரவும் இவ்வேளையில் நோய் குப் பயந்து ஒழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மனிதர்கள் மனிதர்களுடன் போராடும் போது மறைந்து வாழ்வதை விட நோய்க்கு பயந்து தனிமைப்படுத்தல் என்பது மனிதர்களுக்கு இறைவன் கொடுத்த தீர்ப்பாகவே பார்க்கமுடியும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பட்டிருப்பு தொகுதி இலங்கை தமிழரசு கட்சி தலைவருமான பா.அரியநேத்திரன் தெரிவுத்தார்.

தற்போதய நிலைமை தொடர்பாக மேலும் கூறுகையில் –

இன்று உலகம் முழுவதும் ஒருநோய் மக்களை அச்சுறுத்தி ஆட்கொள்ளி வைரஸாக மிகவேகமாகப் பரவிவருகிறது.

உலகமயமாக்கல் மற்றும் நவீன விஞ்ஞான யுகத்தில் எத்தனை கண்டுபிடிப்புகளை மனிதர்களின் அறிவாற்றலால் கண்டுபிடித்தாலும் இந்த கொரோனா நோய்க்கு இதுவரை மனிதரால் மருந்து கண்டுபிடிக்கப்படாமை வேதனையான விடயமாகும்.

ஆயுதத்தால் மனித அழிப்பதற்காக பல நாடுகள் பல கோடி ஆயுதங்களைக் கண்டுபிடித்து சாதனை படைக்கும் இன்றைய காலத்தில் ஒரு நோயைத் தீர்க்க மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பதன் மூலம் மனிதனை இறைவன் வழிநடத்துகிறான் என்ற உண்மை உணரப்படுகிறது.

அதாவது இறைவனால் விதிக்கப்பட்ட தீர்ப்பை மனிதனால் மாற்றமுடியாது என்பதே இந்த நோய் எமக்கு கற்றுத்தந்த பாடம் எனலாம்.

இயந்திரமயமாக்கல் காலத்தில் ஓய்வின்றி உழைக்கும் மனிதகுலத்தை முழு உலகமுமாகவே வீட்டில் இருந்து ஓய்வெடுக்கும் கட்டளையை இறைவன் எமக்கு அருளியுள்ளான். அதுதான் இந்த நோய் தாக்கத்தால் இந்த



உலகில் இன்று 200 நாடுகளில் ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எல்லா மக்களும் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு ஓய்வெடுக்கும் ஒரு நிலை இறைவனால் எமக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என எண்ணத்தோன்றுகிறது.

போட்டி, பொறாமை, வஞ்சகம், சூது என அதர்மங்களால் மனித மனங்கள் நிறைந்துள்ள இந்த காலத்தில் நாடு,இனம், மதம், குலம், சாதி எல்லாம் கடந்து பதவி, பட்டம், அந்தஸ்து பார்க்காமல், எல்லா மனிதர்களையும் சமமாகத் தாக்கும் இந்த கொரோனா வைரஸ் உலகில் உள்ள அனைத்து மனிதர்களையும் ஒரு கணம் சிந்திக்கவைத்துள்ளது.

இந்த நோயில் இருந்து நாம் விடுபட வேண்டுமானால் இறை சிந்தனையை மனதில் பதித்து, வீட்டில் தனித்திருந்து, சுகாதார பழக்க வழக்கங்களையும் எமது முன்னோர்கள் எமக்கு சொல்லிக்கொடுத்த பாரம்பரிய உணவுப்பழக்க வழக்கங்களையும், நோய்த் தொற்று நீக்கும் தமிழ் கலாசார முறைகளையும் மீண்டும் பேணி வாழவேண்டும் என்பதே இந்தக் கொரோனா எமக்கு சொல்லித் தந்த பாடமாகும். – என மேலும் கூறினார் அவர்.



படம்1



படம் 2

# தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

**படம்1**
வரைந்தவர்
ராஜன் அஸ்வின், தரம் 6,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**படம் 2**
வரைந்தவர்
சுந்தரலிங்கம் பிரவீன், தரம்10
யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு – ஆலய வழிபாடு

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் சுத்தம் சுகம் தரும் எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட சித்திரங்களை வரந்தவர்களது பெயர் விபரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

ஆறுமுகதாஸ் ஆரூரன், தரம் 6
வவுனியா தமிழ் மத்தியமகா வித்தியாலயம்

ஆறுமுகதாஸ் ஆதிரையன் தரம் 2
வவுனியா இரம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்

பிரபாஜிதன் பவிஷ்னன் தரம் 2
கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

ஜெயரூபன் ஹரிஷ் – தரம் 8
கொழும்பு ரோயல் கல்லூரி

ஜெயரூபன் ஆகேஷ் – தரம் 5
கொழும்பு ரோயல் கல்லூரி

பி. ஹர்னிதா – தரம் 6
நல்லாயன் கன்னியர்மடம், கொழும்பு 13

எஸ். நித்தின் தரம் 4
லோகோஸ் கல்லூரி, கொழும்பு

பாஸ்கரன் சதுர்ஜன் – தரம் 10
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

டி. அபிலேஷ் – தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

பி. ஜெய்ன் டீவ்ரிஷ் – தரம் 9
மன்னார் சென் சேவியர் ஆண்கள் கல்லூரி

எஸ். அபிஷ்கன் – தரம் 4
யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

ற. ஜக்ஷான் – தரம் 6
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

மயூரநாதன் தேனுகா – தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

மதிவதனன் லட்சிகன் – தரம் 11
யா/ அருணோதயாக் கல்லூரி

பா. ஹரிஷ் – தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

எஸ். ஹரினி – தரம் 2
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். அக்ஷன்யா – தரம் 4
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

த. சம்யுக்தா – தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா – தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

அ. க. ரிாளன்
யா/ பரியோவான் கல்லூரி

ஜங்கரன் ஆரணி – தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

கிருபா லேணர்ஸ்

கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550

கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
★ இரவு நேர வாகனப் பயிற்சி.
★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★ தவணை முறைக் கட்டணங்கள்.
★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

# அவலப்படும் அன்றாடங்காய்ச்சிக் குடும்பங்களுக்கு உதவும் தன்னார்வத் தொண்டர்களை இலக்கு வைத்துக் கெடுபிடி!

## யாழ். ஊடக அமையம் பெருவிசனம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

நீடித்த ஊரடங்கினால் அவலப்படும் அன்றாடங்காய்ச்சிக் குடும்பங்களுக்கு உதவும் நடவடிக்கையில் ஈடுபடும் தன்னார்வத் தொண்டர்களை இலக்கு வைத்துக் கெடுபிடி கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாக யாழ். ஊடக அமையம் பெருவிசனம் தெரிவித்திருக்கின்றது.

இது தொடர்பாக யாழ் ஊடக அமையம் நேற்று விடுத்த அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கை முழுவதும் கெரோனோ வைரஸ் தாக்கம் தொடர்பிலான எச்சரிக்கையும் விழிப்புணர்வும் முடுக்கிவிடப்பட்டுள்ள அதே வேளை அரசினால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு மக்களை முற்றாக வீடுகளிற்குள் முடக்கிவிட்டுள்ளது.

அரசினது இத்தகைய அறிவிப்பிற்கு வடக்கு மாகாணமும் விதிவிலக்கல்ல. ஆனாலும் மக்களை வீடுகளுள் இருக்குமாறு அரசு அறிவித்துவருகின்ற போதும் வீடுகளுக்குள் அகப்பட்டிருக்கும் மக்களில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற அன்றாடங்காய்ச்சி குடும்பங்களது நிலை நாளுக்கு நாள் மோசமான கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

அரசினது அறிவிப்புக்களும் அரச அதிகாரிகளது அறிவிப்புக்களும் வெறுமனே அறிக்கைகளாகவும் புள்ளிவிவரங்களாகவும் இருக்கின்ற போதிலும் யதார்த்தத்தில் மக்களிற்கு இன்று வரை நிவாரணங்கள் எவையுமே கிட்டியிருக்கவில்லையென்பதே உண்மையாக இருந்து வருகின்றது.

மக்களை வீடுகளினுள் முடங்கியிருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்ட நாள் முதலே அன்றாடங் காய்ச்சிக் குடும்பங்களிற்கு நிவாரணம் வழங்குவது பற்றிய அறிவிப்புக்களும் வெளியிடப்பட்டே வருகின்றன.

ஆனாலும் அவையெல்லாம் வெறும் ஊடகங்களிற்கான அறிக்கைகளாக, அரசினாலும் அதிகாரிகளாலும் வெளியிடப்படும் தகவலாக உள்ளனவேயன்றி யதார்த்தத்தில் ஏதும் கிட்டாமலேயுள்ளது.

குறிப்பாக சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களிற்கு ஆகக்குறைந்தது கடன் முற்பணத்தை வழங்கப் போகிறார்கள் எனச் சொன்ன அதிகாரிகளது உறுதிமொழி கூட பெரும்பாலான இடங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் தமது அன்றாட ஒரு வேளை உணவிற்காக போராடும் மக்களது தேவைகளை நிறைவேற்ற பாடுபடும் தன்னார்வ உதவி அமைப்புக்கள் மற்றும் இளம் சமூகத்தின் பணிகள் வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாத ஒன்றாக தற்போதைய சூழலில் உள்ளது.

உதவி கோரப்படுகின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் தேடிச்சென்று மக்களது வீடுகள் தோறும் இத்தகைய தரப்புக்கள் தமது அர்ப்பணிப்பு மிக்க சேவையினை வழங்கிவருகின்றன.

இத்தகைய உதவிகள் மக்களது மனதில் நம்பிக்கையினையும் தமது வீடுகளுள் அவர்கள் தங்கியிருக்க வேண்டிய சூழலின் நியாயத்தை வலியுறுத்துவனவாகவும் இருந்து வருகின்றன.

யாழ்.ஊடக அமையமும் தன்னிடம் வருகின்ற உதவிக்கோரிக்கைகளை இத்தகைய தன்னார்வ உதவி அமைப்புக்கள் ஊடாகவே மக்களிற்கு பெற்று வழங்கி வருகின்றது.

ஆனாலும் இத்தகைய உதவிகளை வழங்கும் தரப்புக்களை இலக்கு வைத்து கடந்த சில நாள்களாக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் அத்தகைய உதவிகள் கூட அன்றாடங்காய்ச்சி குடும்பங்களை சென்றடைய முடியாத சூழலைத் தோற்றுவித்துள்ளன.

நேற்றைய தினம் கொடிகாமத்தில் இவ்வாறான தன்னார்வ உதவியாளர்கள் நால்வர் கைதாகிப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அதே போன்று இன்று ஞாயிற்றுக்கிழமை தீவுப்பகுதிகளிற்கு உதவிகளை வழங்கிய பின்னர் யாழ்.நகரப்பகுதிக்கு திரும்பியவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். ஆயினும் அவர்களிடம் படை சிவில் நிர்வாக அலுவலகம் வழங்கிய அனுமதி இருந்த போதும் சோதனை சாவடியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

பலத்த சிரமங்களின் பின்னராகவே அவர்களால் இரவு வீடு திரும்ப முடிந்திருந்தது.

மக்களை வீடுகளுள் முடங்கியிருக்குமாறு கோரப்படுவதன் நியாயம் எவ்வளவு மறுக்கப்படமுடியாததொன்றோ அதே போன்று அவர்களைப் பட்டினிச்சாவிலிருந்து காப்பாற்றுவதுமாகும்.

அரசு ஏற்கனவே வாக்குறுதி அளித்தது போன்று நிவாரணப்பொருள்களை வீடு தேடி சென்று விநியோகிக்கும் வரையிலேனும் பட்டினி சாவிலிருந்து மக்களைக் காப்பாற்ற இத்தகைய தன்னார்வ தரப்புக்களது சேவை தேவையாகவுள்ளது.

யதார்த்த நிலையினை புரிந்து இத்தகைய தன்னார்வ தரப்புக்கள் தங்கள் சேவையினை தடங்கலின்றி வழங்க உரிய நடவடிக்கைகளை எடுத்துதவுமாறு அரசினையும் அரச பிரதிநிதிகளான வடமாகாண ஆளுநர்,மாவட்ட செயலர் மற்றும் பிரதேச செயலர்களையும் காவல்துறை மற்றும் முப்படைகளையும் யாழ்.ஊடக அமையம் கேட்டுக்கொள்கின்றது.

மக்களை வீடுகளுள் முடக்கி வைத்தல் என்ற வகைப்படுத்தலில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தன்னார்வத் தொண்டமைப்புக்களை முடக்குவது, பட்டினிச்சா சூழலையே ஏற்படுத்துமென்பதை சுட்டிக்காட்டவும் யாழ்.ஊடக அமையம் விரும்புகின்றது. - என்று உள்ளது.

## சரவணை உறவுப் பாலத்தினால் பொருளாதார உதவிகள் வழங்கல்

*நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலைகாரணமாக அன்றாட வாழ்க்கையில் பாதிக்கப்பட்டுள்ள - பொருளாதாரத்தில் பின்தங்கிய - சரவணை வாழ் மக்களிற்கு ரூபா நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை சரணவனை உறவுப் பாலத்தினால் வழங்கிவைக்கப்பட்டன.*

*இது பற்றி மேலும் தெரிய வருவதாவது :-*

*நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக வேலணைப் பிரதேசச் சபைக்குட்பட்ட கிராம சேவகப் பிரிவுகளான ஜே20, ஜே21 சரவணையில் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களிற்கே இந்த உலர் உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.*

*1250 கிராம் சம்பா அரிசி, 650 கிராம் பச்சை அரிசி, 700 கிராம் பருப்பு, 700 கிராம் சீனி, 250 கிராம் தேயிலை என்பன அடங்கிய உலர் உணவு பொதி ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கிவைக்கப்பட்டது. மேலும், பொருளாதார உதவிகளைத் தேவைப்படுபவர்கள் சரவணை உறவுப் பாலத்தைத் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*






## விமானப்படை அதிகாரி துப்பாக்கிச் சூட்டில் பலி!

### மேலும் இருவர் காயம்

கொழும்பு, மார்ச் 2

புத்தளம் - முகத்துவாரம் பகுதியில் உள்ள கற்பிட்டி விமானப்படை முகாமில் இன்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் விமானப்படை அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் மேலும் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## முகக் கவச வியாபாரத்தில் சில நிறுவனங்களின் தந்திரம்

இலங்கையில் முகக்கவசங்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட காரணம் ஒரு சில தனியார் நிறுவனங்கள் குறைந்த விலைக்கு முகக்கவசங்களை இறக்குமதி செய்து அவற்றை அதிக விலைக்கு மீள் ஏற்றுமதி செய்தமையே என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய மருந்தக அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரி டொக்டர் கமல் ஜயசிங்க இதனை தெரிவித்தார் எனத் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டே கடந்த 16 ஆம் திகதி முகக்கவசங்களை மீள் ஏற்றுமதி செய்ய தடைவிதித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காகவே முகக்கவசங்களுக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்தாகவும் டொக்டர் கமல் ஜயசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## 130 பேர் இன்று வீடு திரும்புவர்

14 நாட்கள் தனிமைப்படுத்தல் மருத்துவ கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்ட வர்களுள் 130 பேர் இன்று தமது வீடுகளுக்கு செல்லவிருக்கின்றனர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்தார்.

கொவிட் 19 தொற்று பரவுவதை தடுப்பதற்காக தேசிய செயல்பாட்டு மத்திய நிலையத்தில் நேற்று அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். தனிமைப் படுத்தலுக்குட்படுத்தப்பட்டிருந்த 77 பேர் நேற்று வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இராணுவத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தும் மத்திய நிலையங்களில் இதுவரையில் 1665 பேர் தனிமைப்படுத்தல் மருத்துவ கண்காணிப்பை பூர்த்தி செய்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என அவர் கூறினார்.

தற்பொழுது 2096 பேர் இந்த நிலையங்களில் இருந்து வருகின்றனர். இவர்களில் 130 பேர் இன்று வீடு திரும்பவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மயிலிட்டிக்கு வந்து தொழில் செய்த 10 திருமலை மீனவர் கண்காணிப்பில்

திருகோணமலையிலிருந்து மீன்பிடிப்பதற்காக யாழ்ப்பாணத்திற்கு சென்ற 10 மீனவர்களை தனிமைப்படுத்திக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனது கணவர் மீன் பிடிப்பதற்காக யாழ்ப்பாணம் சென்ற நிலையில் ஒரு மாத காலமாக வீடு திரும்பாமையினால் அவருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கக் கூடும், என மனைவி ஒருவர் திருகோணமலை பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து திருகோணமலைப் பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து நடத்திய தேடுதல் நடவடிக்கையில் யாழ்ப்பாணம் மயிலிட்டி கடற்பரப்பில் கடற்றொழிலிற்காகச் சென்ற திருகோணமலையை சேர்ந்த மூன்று படகுகள் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டன.

திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள இலங்கை சுங்க இறங்குதுறைக்கு கடற்படை மற்றும் பொலிஸாரின் பலத்த பாதுகாப் புடன் இந்தப் படகுகள் நேற்று அதிகாலை 1.00 மணிக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்தப் படகுகளில் கடற்றொழிலை மேற்கொள்வதற்காக சென்ற திருகோணமலை மாவட்டத்தினை சேர்ந்த 10 மீனவர்களும் கரைக்கு கொண்டு வரப்பட்டனர்.

கடற்படையினரால் படகுகளில் அழைத்துவரப்பட்டவர்கள் ஆரம்ப கட்ட வைத்திய பரிசோதனைக்குப் பின்னர் துறைமுகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு கொரோனா நோய்த்தொற்றுக்கான எந்த அறிகுறிகளும் தென்படவில்லை என்ற போதிலும், அவரவர் வீடுகளில் 14 நாள்கள் தனிமைப் படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடற்றொழிலை மேற்கொள்வதற்காக திருகோணமலையை சேர்ந்த இந்த மீனவர்கள் யாழ் மயிலிட்டிக்கு சென்று அங்கு தங்கியிருந்து தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

எனினும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டமையினால் மீண்டும் திருகோணமலைக்கு வர முடியாத சூழ்நிலை காணப்பட்டதன் காரணமாக அவர்கள் யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்தனர் என ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.





## ஏப்ரல் மாத ஓய்வூதியம் 2 ஆம், 3 ஆம் திகதிகளில்

கொழும்பு, மார்ச் 30

அரசஊழியர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு எதிர்வரும் ஏப்ரல் 2, 3 ஆகிய தினங்களில் வழங்கப்படும் என நிதி அமைச்சின் சார்பில் பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இவ்விரு தினங்களில் பெற முடியாதவர்கள் இருப்பின், ஏப்ரல் 6ஆம் திகதி அவர்களுக்கு அதனை வழங்கி முடிக்க எதிர்பார்ப்பதாகப் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான ஜனாதிபதி சிறப்புச் செயலணியின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதமர் அலுவலகத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

**தபால் அலுவலகத்தில் பெறுவோர்**

ஓய்வூதியத்தை தபால் அலுவலகம் மூலம் பெறுவோருக்கு, அவர்களது வீடுகளுக்கு அல்லது கிராம சேவகர் பிரிவிற்கு தபால் திணைக்களத்தால் கொண்டு வந்து தரப்படும்.

**வங்கிக் கணக்கில் பெறுவோர்**

வங்கிக் கணக்கில் பெறுவோருக்கு அந்தந்த வங்கிகளின் மூலம் உரிய நபரின் கணக்குகளில் ஏப்ரல் 2, 3ஆம் திகதிகளில் வைப்பிலிடப்படும்

**பணத்தை கணக்கிலிருந்து பெறல்**

வங்கிக் கணக்கிலிருந்து பணத்தை எடுக்க எதிர்பார்க்கும் ஓய்வூதியதாரர், ஊரடங்குகாரணமாக ஏற்படும் போக்குவரத்து சிரமத்தை கருதி இதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**கிராம சேவகரைத் தொடர்புறவும்**

வங்கியிலிருந்து பணத்தை பெற விரும்புவோர், தமது கிராமசேவகருக்கு நேர காலத்துடன் அறிவிக்க வேண்டும். அதன் அடிப்படையில் ஏப்ரல் 2, 3 ஆகிய தினங்களில் அவர்களை உரிய வங்கிக்கு அழைத்துச் சென்று மீண்டும் அவர்களது வீடுகளுக்கு கொண்டு வந்து விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

இதற்காக முப்படை மற்றும் பொலிஸாரினால் உரிய போக்குவரத்து வசதி ஏற்படுத்தி தரப்படும் என்பதோடு, இதற்கு கிராம சேவகரின் உதவி பெறப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வங்கிகள் இணக்கம்**

அந்தந்த ஊர்களில் காணப்படும் அனைத்து வங்கிகளினதும் ஒரு கிளை யாவது அன்றைய தினம் திறந்து வைப்பதற்கு, அரச மற்றும் தனியார் வங்கிகள் ஒத்துழைப்பு வழங்க இணங்கியுள்ளது – என்றுள்ளது. (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாமம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் — இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி — இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576